Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 54 | புதன்கிழமை 19 ஜனவரி 2022 | தை 06 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை: 30/=

## வெறும் குப்பை!

கொழும்பு, ஜன.19

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை வெறும் குப்பை என்று ஜனாதிபதியின் சகோதரரும், நிதியமைச்சருமான பஸில் ராஜபக்சவிடம் நேரடியா

15

### கொள்கை விளக்கவுரையில் -

# தமிழர்களுக்கான தீர்வை மறந்தார் கோத்தாபய

- அரசியல் தீர்வு பற்றி கமுக்கம்
- தமிழ்த் தரப்புக்கள் கடும் அதிருப்தி

கொழும்பு, ஜனவரி 19

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நாடாளுமன்றத்தில் நேற்று ஆற்றிய கொள்கை விளக்கஉரையில் தமிழ் மக்களால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் எதுவும் குறிப்பிடவில்லை. இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாகவோ, தீர்வு நோக்கிய ராஜபக்ச அரசின் நகர்வு தொடர்பாகவோ ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச எதுவும் குறிப்பிடாதமை தமிழ் மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

15



## கோத்தாவின் உரை மீது இரு நாள்கள் விவாதம்

கொழும்பு, ஜன.19

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கொள்கை விளக்க உரைமீது நாடாளுமன்றத்தில் இன்றும், நாளையும் விவாதம் இடம்பெறவுள்ளது.

9 ஆவது நாடாளுமன்றத்தின் 2 ஆவது கூட்டத்தொடரை நேற்று சம

15

## தீர்வை வலியுறுத்தும் ஆவணம் மோடிக்கு!

### நேற்றுக் கையளித்தன தமிழ்க் கட்சிகள்

கொழும்பு, ஜன.19

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் கையளிப்பதற்காக தமிழ்க் கட்சிகள் கூட்டாகத் தயாரித்த ஆவணம் இலங்கைக்கான இந்தி

15

## எரிபொருள் இல்லை; மின்வெட்டு அபாயம்!

கொழும்பு, ஜன.19

இலங்கை மின்சார சபையின் எரிபொருள் கையிருப்பு முழந்துள்ள நிலையில், எரிபொருளைப் பெறும்வரை நாளாந்தம் நாடு முழுவ

15



## கோத்தாபய அரசு தோற்றுவிட்டது!

### மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஜன.19

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு தோல்வியடைந்துவிட்டது. அரசின் முக்கியஸ்தர்களின் உரைகள், அவர்கள்

15

### முச்சந்தி முரளி



"அவர் மறந்திருக்க மாட்டார். இப்படி மறக்கிய மாதிரி நடிக்கிறது அவைக்கு கைவந்த கலை பாருங்கோ..."

## நெருக்கடியைத் தீர்க்க இந்தியா கொடுக்கிறது- கடன்!

கொழும்பு, ஜன.19

இலங்கையின் எரிபொருள் நெருக்கடியைத் தீர்ப்பதற்காக இந்தியா அவசர கடனுதவி ஒன்றை வழங்க முன்வந்துள்ளது. பெற்றோலிய பொருள்களைக் கொள்வ

15

## கடைசியில் சுசில்!

கொழும்பு, ஜன.19

அரசை விமர்சித்தமைக்காக இராஜாங்க அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்ட சுசில்பிரேம

15

## மூங்கிலாறு சிறுமி கொலை: சந்தேகநபர்களுக்கு மறியல்

முல்லைத்தீவு, ஜன.19

மூங்கிலாறில் 13 வயதுச் சிறுமி சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சிறுமியின் தாய், தந்தை, சகோ

15








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## புலிகளைப் பயங்கரவாதிகள் என்றவர்கள்

# சாரா விடயத்தில் எதற்கு மௌனம்?

### முஜிபூர் எம்.பி. கேள்வி



**கொழும்பு, ஜன. 19**

**இந்தநாட்டில் விடுதலைப் புலிகளே பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் என்று அவர்களது ஒளிப்படங்களை ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களிலும் தொங்கவிட்டவர்கள் சாரா விடயத்தில் மட்டும் ஏன் மௌனமாக இருக்கின்றனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரகுமான் கேள்வியெழுப்பியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

நாட்டில் இடம்பெற்ற ஈஸ்டர் குண்டுத்தாக்குதலுக்கு மூளையாகச் செயற்பட்டவர்களைக் கைது செய்வதாக உறுதியளித்து, ஆட்சிக்கு வந்த அரசு அதைச் செய்யக் கூடிய நிலையில் உள்ளதா அல்லது அவ்வாறு செய்யவேண்டிய அவசியமில்லையா? என்ற கேள்வி சமூகத்தில் பேசப்படுகின்றது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நடந்து இன்று ஆயிரம் நாள்கள் கடந்து விட்ட நிலையில், ஸஹ்ரான் கும்பலின் முக்கிய சந்தேகநபரான சாரா ஜஸ்மின் புலஸ்தினி மகேந்திரனைப் பிடிக்க அரசு என்ன செய்யப்போகின்றது என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

சாரா இன்னும் உயிருடன் இருக்கின்றார் என்று ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அவரைக் கைது செய்ய உதவுமாறு அரசு இன்டர்போலுக்கு அறிவித்துள்ளதா என்பதை நாங்கள் அறிய விரும்புகின்றோம்.

ஸஹ்ரானுக்குப் பக்கத்தில் இருந்த சாரா என்ற அந்தப் பெண்ணைப் பிடிக்க முடிந்தால், மூளையாகச் செயற்பட்டோர், ஆயுதங்கள், வெடிகுண்டுகளை வைக்க கற்றுக் கொடுத்தவர்களை எல்லாம் கண்டு பிடிக்கலாம்.

அண்மைக்காலமாக விடுதலைப்புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களின் ஒளிப்படங்கள் ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் காணப்பட்டன. ஆனால் எந்த இடத்திலும் சாராவின் ஒளிப்படம் இடம்பெறவில்லை. சாரா விவகாரத்தை அரசு வேண்டுமென்றே தவிர்க்கின்றதா? என்றார். (ம-4-இ)

---

## உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை மூடிமறைக்க அரசு முயற்சி

### சஜித் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 19

அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை பயன்படுத்திய அரசு, தற்போது அந்தத் தாக்குதலை முழுமையாக மறந்துவிட்டது. அனைத்தையும் மூடிமறைக்க முயற்சிக்கின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த அரசு ஒருபோதும் நீதியை வழங்காது. பக்கச்சார்பற்ற சுயாதீன விசாரணையின் பின்னர், முக்கிய சூத்திரதாரி உட்பட தாக்குதலுடன் தொடர்புபட்ட அனைவருக்கும் உரிய தண்டனை வழங்கவேண்டும். பொதுமக்கள் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் குறித்து வெளிப்படையாகவே அதிருப்தியை வெளியிட ஆரம்பித்துள்ளனர். அரசாங்கத்தின் நடவடிக்கைகளும், அலட்சியத்துடன் கூடிய விசாரணைகளும் பொதுமக்களின் கரிசனைகள் நியாயமானவை என்பதை வெளிப்படுத்துகின்றன. அதேவேளை, பொரளை தேவாலயத்தில் கைக்குண்டு மீட்கப்பட்டமை குறித்த விசாரணைகள் இடம்பெறும்விதம் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. மக்கள் அரசாங்கத்தின் மீதும், பொலிஸார் மற்றும் படையினர் மீதும் நம்பிக்கை இழந்துள்ளனர் என்றார். (ம-4-இ)

---

## இலங்கை இராணுவத்தினரை தடைப்பட்டியலில் இணைக்குக

### பிரிட்டன் அரசுக்கு அழுத்தம்

கொழும்பு, ஜன. 19

போர்க்குற்றங்களில் ஈடுபட்ட இலங்கை இராணுவத்தினருக்கு எதிராக தடைவிதிக்கும் நடவடிக்கையை, பிரிட்டன் தொடர்ந்தும் இழுத்தடிப்புச் செய்யக்கூடாது என்று பிரிட்டன் தமிழர்களுக்கான அனைத்துக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் 2009ஆம் ஆண்டில் நடந்த உள்நாட்டுப் போரின் இறுதிப் பகுதியில் நடந்த போர்க் குற்றங்களுக்குப் பொறுப்பான, கட்டளையை வழங்கும் அதிகாரத்திலிருந்த இலங்கை இராணுவ ஜெனரல்களுக்கு உலகளாவிய மக்னிஸ்கி சட்டத்தைப்பயன்படுத்தி, அரசு தடை செய்ய வேண்டும்.

பிரிட்டனில் வாழும் பரந்தளவிலான மற்றும் செல்வாக்குமிக்க தமிழ் சமூகத்தின் நம்பிக்கையை வென்றெடுக்க வேண்டுமெனில், சர்வதேச மக்னிஸ்கி சட்டத்தின்கீழ், நடவடிக்கை எடுக்கவேண்டும். பல நாடுகளில் ஏற்கனவே தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், பிரிட்டன் ஏன் காலதாமதம் செய்கின்றது என்று பிரிட்டன் தமிழர்களுக்கான அனைத்துக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் தலைவர் எலியற் கொல்பர் கேள்வி எழுப்பியுள்ளார். (ம-4-இ)

---



## தரிசு நிலங்களில் வீட்டுத் தோட்டம்

கொழும்பு, ஜன. 19

நாட்டில் தரிசு நிலங்களில் பொருத்தமான உணவுப் பயிர்கள் பயிரிடப்படும் என்று நெடுஞ்சாலைகள் அமைச்சரான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின்கீழ் முதற்கட்டமாக ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் சுமார் ஒருலட்சம் வீட்டுத்தோட்டங்கள் அமைக்கப்படவுள்ளன.

காய்கறிகள் மற்றும் பழங்களுக்கு ஏற்படும் பற்றாக்குறையை நிர்வர்த்திக்க, இந்தத் திட்டத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படும். நாட்டில் சுமார் ஒரு லட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் இருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த நிலங்களில் பழங்கள் மற்றும் காய்கறிகள் மற்றும் பிற அத்தியாவசிய உணவுப் பயிர்கள் பயிரிடப்படும்.

அதேவேளை, இராணுவ முகாம்கள், அரச பாடசாலைகள், பொலிஸ் நிலையங்கள், மருத்துவமனைகள் மற்றும் மத வழிபாட்டுத் தலங்களிலுள்ள பயிரிடப்படாத நிலங்களில் உடனடியாக உணவுப்பயிர்கள் பயிரிட வேண்டும். இந்தத் திட்டத்துக்காக 560 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4-இ)

---

## மின்னுற்பத்திக்குத் தேவையான எரிபொருள் இந்தியாவிடமிருந்து

### அரசு தீர்மானம்

கொழும்பு, ஜன. 19

மின் உற்பத்திக்குத் தேவையான எரிபொருள் இந்தியாவிடம் இருந்து கொள்வனவு செய்யப்படும் என்று மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; மின்சார உற்பத்திக்குத் தேவையான எரிபொருளைப் பெற்றுக் கொள்ளும்வகையில் இடம் பெற்ற கலந்துரையாடலில் சில விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.

இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்திடம் எதிர்வரும் நாள்களுக்கான எரிபொருளைப் பெற்றுக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தவிடயம் தொடர்பில் அவர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளுமாறு, இலங்கை மின்சார சபையின் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தேவை ஏற்படின் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்பதற்கு நாமும் தயாராகவுள்ளோம் என்றார். (ம-4-இ)

---

## யாழ்.போதனாவில் திரவ ஒட்சிசன் தாங்கி

யாழ்ப்பாணம்,ஜன.19

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் புதிதாக அமைக்கப்பட்ட திரவ ஒட்சிசன் தாங்கி நேற்றுத் திறக்கப்பட்டது.



வட மாகாணத்திலேயே முதற்றடவையாக, 24 மில்லியன் ரூபா செலவில், 10 ஆயிரம் லீற்றர் கொள்ளளவு கொண்டதாக இந்தத் தாங்கி அமைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் மருத்துவமனைக்குத் தேவையான ஒட்சிசன் குழாய்வழி மூலமாக, விடுதிகளுக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்படவுள்ளதுடன், 10 நாள்களுக்கு ஒரு முறை இதனை நிரப்பினால் போதுமானதாக இருக்கும் என்று மருத்துவமனையின் பிரதிப்பணிப்பாளர் ஸ்ரீபவனாந்தராஜா தெரிவித்துள்ளார். (ம-4-20)

---

## சீரமைப்பு செய்யப்படவுள்ள கரியாலைநாகபடுவான் வீதி

கிளிநொச்சி, ஜன. 19

நீண்டகாலமாக அபிவிருத்தி செய்யப்படாது காணப்பட்ட கிளிநொச்சி-பூநகரியிலுள்ள கரியாலை நாகபடுவான் இல 3 பாடசாலையில் இருந்து கரியாலைநாகபடுவான் இலக்கம். 2 பாடசாலை வரையான 4 கிலோ மீற்றர் வீதி சீரமைப்புச் செய்யப்படவுள்ளது.

பூநகரி பிரதேசசபையின் கோரிக்கைக்கு அமைய புனரமைப்பு செய்யப்படவுள்ள இந்தவீதியை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியலாளர் மற்றும் பூநகரி பிரதேசசபை தவிசாளர் ஆகியோர் நேரில்சென்று, மதிப்பீட்டு வேலைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-13)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## எம்.ஜி.ஆரின் பிறந்த தின நிகழ்வு

வட்டுக்கோட்டை, ஜன. 19
தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் 107 ஆவது பிறந்த தின நிகழ்வு, நேற்றுமுன்தினம் அராலி குமுக்கன் குளத்தடி மைதானத்தில் நடைபெற்றது. எம்.ஜி.ஆர் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நிகழ்வுகள் நடைபெற்றன. பிரதம விருந்தினராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் கலந்து சிறப்பித்தார். (ம-ரி1,27)

# 15 நாள்களுக்குள் மட்டும் 5 மலேரியா நோயாளர்கள்

### யாழ்ப்பாணம் உள்ளடங்கலாக 4 மாவட்டங்கள் அபாயத்தில்

**கொழும்பு, ஜன. 19**
**இலங்கையில் கடந்த 15 நாள்களுக்குள் மட்டும், 5 மலேரியா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.**

யாழ்ப்பாணம் உட்பட கம்பஹா, கொழும்பு மற்றும் காலி ஆகிய மாவட்டங்கள் அபாயத்தை எதிர்கொண்டுள்ளன என்று மலேரியா நோய் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் பிரசாத் ரணவீர தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள மலேரியா நோயாளர்கள் ஐவரும், ஆபிரிக்க நாடுகளில் இருந்து வருகைதந்தவர்கள்.
அவர்களில் இருவர் யாழ்ப்பாணத்திலும், ஏனைய மூவர் கொழும்பு, கம்பஹா மற்றும் காலி ஆகிய இடங்களிலும் வசிப்பவர்கள். குறித்த அனைவருக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. கடந்த ஆண்டு நாட்டில் 26 மலேரியா நோயாளர்கள் பதிவாகினர். இந்த ஆண்டின் முதல் 15 நாள்களில் ஐந்து நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். மலேரியா நோயால் கண்டறியப்பட்ட உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நோயாளிகளுக்கு அரச மற்றும் தனியார் மருத்துவமனைகளில் இலவச சிகிச்சை அளிப்பதே நாட்டின் தேசியக் கொள்கை. இலங்கையில் இறுதியாக 2007ஆம் ஆண்டில் மலேரியாவால் இறப்பு பதிவாகியுள்ளது- என்றார். (ம-4,இ)

## வவு, பரசங்குளத்தில் மோ. குண்டுகள் மீட்பு

வவுனியா, ஜன. 19
வவுனியா, பரசங்குளம் காட்டுப் பகுதியில் மோட்டார் குண்டுகள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.
இராணுவப் புலனாய்வாளர்களுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், புளியங்குளம் பொலிஸாருடன் இணைந்து பரசங்குளம் காட்டுப்பகுதியில் மேற்கொண்ட தேடுதலின்போதே குறித்த குண்டுகள் மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட குண்டுகளைச் செயலிழக்கச் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், மேலதிக விசாரணையை புளியங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-110)



## நாட்டுத்துப்பாக்கியுடன் பளையில் ஒருவர் கைது

கிளிநொச்சி, ஜன.19
பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சோரன்பற்று பகுதியில் இடியன் நாட்டுத் துப்பாக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.
தனிநபர் ஒருவர் இடியன் நாட்டுத் துப்பாக்கி வைத்திருப்பதாக பளை பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து குறித்த சந்தேகநபரின் வீட்டை சோதனையிட்டபோது அவரிடமிருந்து நாட்டுத் துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார் என பளை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-113)



## பெரும்போக அறுவடை முடியும்வரை கால்நடைகளை கட்டி வளர்க்குக

யாழ்ப்பாணம், ஜன. 19
பெரும்போக நெற்செய்கைக்கான அறுவடை முடியும் வரை கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு கமக்கார அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.
கோப்பாய், நீர்வேலி போன்ற பகுதிகளில் சிலர் மேய்ச்சலுக்காக கால்நடைகளை அவிழ்த்து விடுகின்றனர். இதனால் நெற்பயிர்களை கால்நடைகள் மேய்ந்து விடுகின்றன. ஆகவே அறுவடை முடியும்வரை கால்நடை வளர்ப்போர், கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு கமக்கார அமைப்புக்கள் தெரிவித்துள்ளன. (ச-17)




**கனவு கண்டு முழிச்ச மாதிரி, ஜனாதிபதியா வந்து ரண்டு வருசத்துக்குப் பிறகுதான் , தமிழ்க் கட்சியளின்ர நினைப்பு கோத்தாபயவுக்கு வந்து, கூட்டமைப்பைச் சந்திக்க நினைச்சிருக்கிறார். இந்தக் கதை வெளியில வந்தவுடன, 'சரி, இப்ப சிங்களச் சனமும் கொந்தளிக்கிறதால, தமிழரின்ர பக்கம் கொஞ்சம் இறங்கி வாறார் போல' எண்டுதான் கூட்டமைப்புக்காரர் நினைச்சவை. அதிலும் சம்பந்தன் ஐயா, 'கோத்தாவே எங்களை வலிய வந்து கூப்பிடுறார் எண்டால், எல்லாம் நாங்கள் வெளிநாடுகள் மூலம் குடுத்த அழுத்தம்தான் காரணம். எப்பிடி எங்கட ராஜ தந்திரம்?' எண்டு தமிழ்ச் சனத்துக்கு பவர் காட்டலாம் எண்டு புளுகமாயிருந்தார்.**

**அதால நேற்று பார்லிமெண்டில கோத்தாபய கொள்கைவிளக்க உரையாற்றேக்க கட்டாயம், தமிழர் பிரச்சினை பற்றியும் கதைப்பார் எண்டு தான் சம்பந்தர், இந்த ஏலாத நிலைமையிலையும் போனவர்.**

**ஆனால் முதலையும் கோத்தாவும் கொண்டது விடாது கண்டியளோ. வேதாளம் மாதிரி திரும்பவும் பார்லிமெண்டில நிண்டுகொண்டும், அதே போரில வெண்ட புராணமும், நாட்டை மீட்டெடுக்க எல்லாரும் வாங்கோ எண்ட கூப்பாட்டையும் தவிர உருப்படியா கோத்தா ஒண்டும் கதைக்கேலை. கதையோட கதையா 'உங்கட கொள்கை, கோதாரி எல்லாம் விட்டிட்டு நாட்டின்ர பொருளாதாரத்தை மீட்க உழையுங்கோ' எண்டும் ஆள் சொல்லியிருக்கு. கிட்டத்தட்ட தமிழர்கள் எண்ட இனம் இருக்கு, அவைக்கு தீர்க்காமல் நீளுற பிரச்சினையள் இருக்கு எண்டதையே மறந்திட்ட மாதிரித்தான் கோத்தா உரையாற்றினவர்.**

**உதையெல்லாம் கேட்டு சம்பந்தருக்கு பத்திக் கொண்டு வந்திட்டுதாம். 'இப்பகூட ஆளுக்கு அறிவு வரேலையே. பிறகென்னத்துக்கு உதை மினக்கெட்டு குந்தியிருந்து கேக்க வேணும்?' எண்டு இடையிலேயே எழும்பி வெளியில போயிருக்கிறார் சம்பந்தர். வழியில வந்துகொண்டிருந்த நிதியமைச்சர் பஸில், தெரியாத்தனமா 'எங்க இடையில போறியள்?' எண்டு கேக்க, 'உதெல்லாம் ஒரு பேச்சோ? வெறும் குப்பை. உதை நான் சொன்னன் எண்டு மஹிந்தவுக்கும் சொல்லுங்கோ. கோத்தாவுக்கும் சொல்லுங்கோ' எண்டிட்டு சம்பந்தர் விறுவிறு எண்டு போட்டாராம்.**

**நேற்றையான் கோபத்தைப்பாக்க, இனிமேல் கோத்தாபய கதைக்க கூப்பிட்டால் மற்றக் கூட்டமைப்புக்காரர் போனாலும் , சம்பந்தர் போகமாட்டார் போல கிடக்கு.**
**மோடிக்கு சொன்ன மாதிரி 'இப்ப ரைம் இல்லை' எண்டு சொன்னாலும் சொல்லக்கூடும்.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைமுகநகரால் கொரோனா அலை






கொழும்பு, ஜன. 19
கொழும்புத்துறைமுக நகரத்தில் புதிதாக திறக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடுவதற்கு பொதுமக்கள் அதிகளவில் செல்வதால், மற்றொரு கொரோனா அலை உருவாகலாம் என்று அச்சம் வெளியிடப் பட்டுள்ளது.

இலங்கையில் ஒமிக்ரோன் வைரஸ் வேகமாகப் பரவி வரும் நிலையில், துறைமுக நகருக்குச் செல்பவர் களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துள்ளது. சுகாதார நடைமுறைகளும் அங்கு மீறப்பட்டுள்ளமை யால், துறைமுக நகரால் கொரோனா அலையொன்று உருவாகலாம் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-4,இ)

# ஒமிக்ரோன் மாறுபாட்டால் ஐந்தாவது அலை!

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை



**கொழும்பு, ஜன. 19**
**ஒமிக்ரோன் மாறுபாடு காரணமாக, நாட்டில் ஐந்தாவது கொரோனா அலை உருவாகும் அபாயம் உள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.**

இது தொடர்பில் சங்கத் தின் மத்திய குழு உறுப் பினர் மருத்துவர் பிரசாத் ரணவீர தெரிவிக்கையில், ஒமிக்ரோன் மாறுபாட் டின் காரணமாக, குறிப் பாக அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் மற்றும் கன டாவில் தொற்று வீதம் வெகுவாக அதிகரித்துள் ளது. இலங்கையிலும் தொற்று சிறிதளவு அதிக ரித்துள்ளது. ஒமிக்ரோன் மாறுபாட்டின் அதிக பர வல் தன்மை காரண மாக, தொற்றாளர்களின் எண்ணிக்கையில் திடீர் அதிகரிப்பு ஏற்படக்கூடிய சாத்தியமுள்ளது.

தடுப்பூசித் திட்டத்தாலேயே, கொரோனா வைரஸ் தொடர்பான இறப்புக்க ளின் எண்ணிக்கை மற் றும் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைந் துள்ளது. எனவே வைர ஸுக்கு எதிராக கணிசமான பாதுகாப்பை தடுப்பூசி வழங்குவதால், அனைவ ரும், தடுப்பூசியைப் பெற் றுக்கொள்ளவேண்டும். அதேவேளை கொரோனா வைரஸின் எதிர்காலம் நிச்சயமற்று இருப்பதால், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்க லைக்கழகத்தில் நடத்தப் படும் பரிசோதனைக ளைப் போன்று, நாட்டி லுள்ள பிற பல்கலைக் கழகங்களிலும் பரிசோத னைகளை நடத்துவதற்கு அரசு வசதிகளை மேற் கொள்ளவேண்டியது அவ சியம்- என்றார். (ம-4,இ)

# பல்கலையில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 19
புகழ்பெற்ற ஆங்கில நாவலாசிரியர் அனுக் அருட் பிரகாசம் பங்குபற்றும் "வாசிப்பும் கலந்துரையாட லும்" நிகழ்வு நாளை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் மொழியியல் ஆங்கி லத்துறையினரது ஏற்பாட்டில் நடைபெறும் நிகழ்வில், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட் டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-ரி1)

# இரண்டு வாரங்களில் 39,172 சுற்றுலாவிகள்

கொழும்பு, ஜன. 19
இந்த வருடத்தின் முதல் இரண்டு வாரங்களில் மட்டும், 39 ஆயிரத்து 172 சுற்றுலாப் பயணி கள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

கொரோனாத் தொற்று பரவிய கடந்த வருடத் தில் ஒரு லட்சத்து 94 ஆயிரத்து 495 சுற்று லாப் பயணிகள் இலங் கைக்கு வருகை தந்தி ருந்தனர். கடந்த 3 மாதங்களில் மட்டும் ஒரு லட்சத்து 56 ஆயி ரத்து 571 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். இந்தியா, உக்ரைன், ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, பிரான்ஸ், மாலைதீவு, அவுஸ்திரே லியா, போலந்து மற் றும் அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து அதிக ளவான சுற்றுலாப் பய ணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

அதேவேளை, சுற்று லாப் பயணிகளின் எண்ணிக்கையை அதி கரிக்க அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின் றது -என்றார். (ம-4,இ)

# தேவாலயத்தில் கைக்குண்டு மீட்பு

## மற்றொருவர் கைது

கொழும்பு, ஜன. 19
பொரளை கத்தோலிக்க தேவாலய மொன்றில் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில், மற்றுமொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள் ளார். எம்பிலிப்பிட்டிய, பனாமுர பிர தேசத்தில் குறித்த நபர் கைது செய்யப் பட்டுள்ளார்.

சந்தேக நபர் கடவத்தை, பியன்வலப் பிரதேசத்தில் வசிக்கும் 65 வயது டையவர் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது. கடந்த 11ஆம் திகதி பொரளை அனைத்து புனிதர்களின் தேவாலயத் தில் கைக்குண்டு ஒன்று கண்டுபிடிக் கப்பட்டது.

குறித்த தேவாலயத்துடன் நீண்ட காலமாக தொடர்பு கொண்டிருந்த மரு தானையைச் சேர்ந்த 56 வயதுடைய நபரொருவர் சம்பவத்தின் பிரதான சந்தேகநபராக பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் 3 சந்தேக நபர்களைக் கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித் துள்ளனர். (ம-4,இ)

# நட்சத்திர ஹொட்டலில் 35 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஜன. 19
காலி பெந்தோட்டைப் பகுதியில் உள்ள நட்சத்திர ஹொட்டல் ஒன்றில், 32 ஊழியர்கள் மற் றும் 3 வெளிநாட்டுச் சுற்று லாப் பயணிகள் உட்பட 35 பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது.

ஹொட்டல் ஊழியர்கள் உட்பட தொற்றாளர்கள் அனைவரும், சுகாதார அறிவுறுத்தலின் பேரில் தனிமைப்படுத்தப்பட் டுள்ளனர்.

ஏனைய ஊழியர்களும் பி.சி. ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று பெந்தோட்டை இந்துருவ சுகா தார மருத்துவ அதிகாரி அலு வலகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ம-4,இ)

# சுற்றுலாவிகளின் வருகை அதிகரிப்பு: ஹொட்டல்களில் கட்டணம் அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 19
இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை அண்மைக்காலமாக அதிக ரித்துள்ளதால், ஹொட்டல்கள் மற்றும் அறைகளின் கட்டணங்கள் அதிகரித் துள்ளன என்று இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் உபுல் தர்மதாச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த வருடத்தில் இதுவரை 46 ஆயி ரத்து 942 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். தினமும் கிட்டத்தட்ட 3 ஆயிரம் சுற்று லாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தருகின்றனர். அவர்களை அழைத்து வருவதற்கு கிட்டத்தட்ட 22 விமான நிறுவனங்கள் தற்போது செயற்படு கின்றன.

பல விமான நிறுவனங்கள் இந்த ஆண்டு சுற்றுலாப் பயணிகளை நாட் டுக்கு அழைத்து வர இணங்கியுள்ளன. ரஷ்யாவில் இருந்து 9 ஆயிரத்து 866 பேர், பிரிட்டனிலிருந்து 4 ஆயிரத்து 697 பேர், உக்ரைனில் இருந்து 4 ஆயி ரத்து 241 பேர், இந்தியாவில் இருந்து 3 ஆயிரத்து 784 பேர், நெதர்லாந்தில் இருந்து 3 ஆயிரத்து 737 பேரும் என குறிப்பிட்ட 5 நாடுகளிலில் இருந்தே அதிகளவான சுற்றுலாவிகள் வருகை தந்துள்ளனர்.

சுற்றுலாப் பயணிகளின் வருகைக்கு ஏற்ப ஹொட்டல்கள் மற்றும் அறைக ளின் கட்டணங்கள் அதிகரித்துள்ளன. குறிப்பாக தங்காலையிலுள்ள குறிப் பிட்ட சில ஹொட்டல்களில் ஒரு இரவுக் கான அறைக் கட்டணம் 50 ஆயிரம் ரூபா வரை அதிகரித்துள்ளது - என் றார். (ம-4,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'பிக்கப்' மோதியதில் மின்சாரம் துண்டிப்பு

சாவகச்சேரி, ஜன. 19

நாவற்குழி ஏ-9 வீதியில் நேற்றுமுற்பகல் 10 மணியளவில், வேகக் கட்டுப்பாட்டை இழந்த பிக்கப் வாகனம், வீதியோர மின்கம்பத்துடன் மோதியதில் பிரதேசத்திலுள்ள மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

வாகனம் பலத்த சேதமடைந்தபோதிலும் பயணித்தவர்களுக்கு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ம-ரி1-9)

### கிளிநொச்சியில்

# விலையேற்றத்துக்கு எதிராக பெண்கள் அமைப்பு பேரணி!

**கொழும்பு, ஜன.19**

**விலை ஏற்றம் மற்றும் உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பெண்கள் சிவில் சமூக அமைப்பின் ஏற்பாட்டில், கிளிநொச்சியில் நேற்று கண்டன ஊர்வலம் முன்னெடுக்கப்பட்டது.**





கிளிநொச்சி டிப்போ சந்தியில் ஆரம்பிக்கப்பட்ட ஊர்வலம் கிளிநொச்சி மாவட்டச் செயலகம் வரை இடம்பெற்றது. நிறைவில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரனிடம் மனு கையளிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் நெற்களஞ்சியசாலைகள் இருந்தும் வெளி மாவட்டங்களுக்கே நெல் கொள்வனவு செய்யப்படுகின்றது. நாளுக்கு நாள் விலையேற்றமும், பொருள்களின் தட்டுப்பாடும் அதிகரித்துள்ளன. இதனால் திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று ஊர்வலத்தில் ஈடுபட்டவர்கள் சுட்டிக்காட்டினர். (ம-4-113)

## அகழ்வில் வெளிவந்த பழமையான கல்லறை



கொழும்பு, ஜன. 19

கட்டட அகழ்வொன்றின் போது, தேவாலய வளாகத்திலிருந்து மிகவும் பழமையான கல்லறை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வென்னப்புவ போலவத்தப் பிரதேசத்திலுள்ள பரலோக ராஜ்ய தேவாலய வளாகத்தில், அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்த கட்டடமொன்றுக்காக அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. நிலத்திலிருந்து 3அடி ஆழத்தில், கொங்கிறீட்டுகளால் தயாரிக்கப்பட்ட கல்லறையொன்று கண்டுபிடிக்கப்பட்டது.

இதுதொடர்பில் தேவாலயத்தின் பங்குத் தந்தைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தேவாலய வளாகத்தில் இறந்தவர்களின் சடலங்களைப் புதைப்பது சாதாரண விடயம் என்றாலும், இதற்காக தேவாலய வளாகத்தில் தனியான இடமொன்று ஒதுக்கப்பட்டுள்ளது.

எனினும் குறித்த தேவாலய வளாகத்தில் அவ்வாறு எவரும் தமக்குத் தெரிந்த வரையில் புதைக்கப்படவில்லை என்று தெரிவித்துள்ள பிரதேசவாசிகள், இது மிகவும் பழமையான கல்லறையாக இருக்கலாம் என்று தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் தேவாலய பங்குத் தந்தையால் தொல்பொருள் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டு, மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. (ம-4-இ)

# அரிசி மாபியாக்களுக்கு இனியும் இடமளிக்கோம்

### *அமைச்சர் பந்துல உறுதி*

ஒரு கிலோ அரிசியை 300 ரூபாவுக்கு விற்பனை செய்யத் திட்டமிட்டிருந்த அரிசி மாபியாக்களை உருவாக இடமளிக்கமாட்டோம். மக்களுக்கு நிவாரணத்தைப் பெற்றுக்கொடுக்கும் வகையில், அரிசி இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

எதிர்வரும் புத்தாண்டுக் காலத்தில், சில அரிசி ஆலை உரிமையாளர்கள் நெல் மற்றும் அரிசிக்கு அதிக விலையை விதித்து அரசை அசௌகரியத்துக்கு உள்ளாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அமைச்சரவையில் இந்த விடயம் ஆராயப்பட்டுள்ளது. அரிசிக்கு நிலையான விலை பேணப்பட வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதனால் அரிசி இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அரிசி மாபியாக்கள் நுகர்வோரை சுரண்டுவதைத் தடுக்கும் நடவடிக்கையாகவே, அரிசி இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ நாட்டரிசியை 105 ரூபாவுக்கு மேல் அதிகரிக்க அனுமதிக்கமாட்டோம். சம்பா அரிசி ஒரு கிலோ 130 ரூபாவாகவே பேணப்படும்.

அதேவேளை, 10 கிலோ அரிசி உள்ளிட்ட 20 பொருள்கள் அடங்கிய நிவாரணப் பொதி நுகர்வோருக்கு 3 ஆயிரத்து 998 ரூபாவுக்குக் கிடைக்கும். எந்தவொரு தனிநபரும் 1998 என்ற தொலைபேசி இலக்கத்தைத் தொடர்பு கொண்டு 48 மணித்தியாலத்துக்குள் குறித்த நிவாரணப் பொதியைப் பெற்றுக் கொள்ளலாம் -என்றார். (ம-4-இ)

## கலைஞர்கள் மதிப்பளிப்பு

'புத்திக்கெட்ட மனிதர் எல்லாம்' ஈழத்து திரைப்பட கலைஞர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்து கொண்டார். (ச-113)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

உலகெங்கும் வாழ்கின்ற மக்கள் அனைவரும் கொரோனாத் தொற்றிலிருந்து விடுபட வேண்டி அருளாசியுரையும், வேதபாராயணமும் நாளை வியாழக்கிழமை கிளிநொச்சி கணேசபுரம் சர்வத்த சித்திவிநாயகர் ஆலயத்தில் காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளன. இதன்போது ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீ ஸ்காந்தராசக்குருக்கள் அருளாசி உரையும், வேதபாராயணத்தையும் நிகழ்த்தவுள்ளார். (ம-ச)

# முழங்காவில் பொதுச்சந்தையில் மரங்கள் அகற்றும் வேலைத்திட்டம்

கிளிநொச்சி, ஜன. 19

கிளிநொச்சி - முழங்காவில் பொதுச்சந்தை வளாகத்தில் இடையூறாக இருக்கும் மரங்களை அகற்றும் வேலைத்திட்டம் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

பூநகரி பிரதேசசபைக்குட்பட்ட பொதுச்சந்தை, பல்வேறு குறைபாடுகளோடு காணப்பட்டதையடுத்து, பூநகரி பிரதேச சபையின் இந்த வருட வரவு - செலவுத் திட்டத்தில் குறித்த சந்தைக்கென குறிப்பிடத்தக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய, சந்தையின் அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கான வேலைத்திட்டத்தின் முதற்கட்டமாக இந்த மரங்கள் அகற்றப்பட்டு வருகின்றன. (ம-ரி1-13)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றுலாப் பயணிகள் வடக்குக்கு வருகை

யாழ்ப்பாணம், ஜன.19
நீண்டகாலத்தின்பின் தெற்கிலிருந்து சுற்றுலாப்பயணிகள் வடக்குக்கு வருகை தந்துள்ளனர்.

தைப்பொங்கல் விடுமுறையை முன்னிட்டு, நல்லூர், நயினாதீவு, காங்கேசன்துறை, கீரிமலை உட்பட குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சுற்றுலாப் பயணிகள் படையெடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த காலங்களில் கொரோனா அச்சம் காரணமாக தெற்கு சுற்றுலாவிகளின் வருகை குறைந்து காணப்பட்ட நிலையில் மீண்டும் வடக்குக்கு சுற்றுலாவிகள் படையெடுத்துள்ளனர். (ச-17)

# அரசை விமர்சிப்போரை உடன் வெளியேற்றுக!

## இந்திக வலியுறுத்து



**கொழும்பு, ஜன. 19**
**அரசுக்குள் இருந்து, அரசின் தவறுகளை விமர்சிப்போரை உடன் நீக்கவேண்டும் -என்று இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
அரசுடன் இருப்பவர்கள் அமைச்சர் பதவிகளையும், ஏனைய பதவிகளையும் பெற்றுள்ளனர். இதனால், அரசை விமர்சிக்கும் எவராக இருந்தாலும் நீக்க வேண்டும். அரசு மக்களுக்கு மிகப் பெரிய சேவைகளைச் செய்து வருகின்றது. சில தவறுகள், குறைபாடுகளால் சில முடிவுகளை எடுக்க நேரிட்டுள்ளது. எனினும் இந்த முடிவுகள் அரசோ, ஜனாதிபதியோ எடுத்தவை அல்ல. அரசு இயக்கும் சில இடங்களில் எடுக்கப்பட்ட முடிவுகள். இதனால், இவற்றைப் பேசக்கூடிய இடங்களாக நாடாளுமன்ற குழுக் கூட்டம், நாடாளுமன்றம் ஆகியன இருக்கின்றன. அரசின் குறைகளை இந்த இடங்களில் தெரிவிக்க வேண்டுமே தவிர,
பொது இடங்களில் கூறவேண்டிய அவசியமில்லை. அரசை விமர்சிப்போர் அரசிலிருந்து விலக வேண்டும். அரசை நடத்தக் கூடிய பலர் இருக்கின்றனர். 150க்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எங்களிடம் இருக்கின்றனர். அவர்களில் திறமையான பலர் இருக்கின்றனர். இதனால், இந்தத் திறமைசாலிகளுக்கு இடமளித்து, விலகிச் செல்ல வேண்டியவர்கள் விலகிச் செல்ல அனுமதிக்க வேண்டும் -என்றார். (ம-4-இ)



## நீலா விக்கிரமசிங்க மறைந்தார்

இத்தாலியின் மிலன் நகருக்கான, இலங்கையின் தூதரக அதிகாரியாக பதவி வகித்த நீலா விக்கிரமசிங்க (வயது-72) காலமானார். நீலா விக்கிரமசிங்க இலங்கையின் மூத்த பெண் பாடகர் மற்றும் இசைக் கலைஞரும் ஆவார். (ம-4-இ)

## நீரில் மூழ்கி பெண் சாவு!

கொழும்பு, ஜன. 19
கணவன் மற்றும் 3 குழந்தைகளுடன் கடலில் உல்லாசப் பயணம் சென்ற குடும்பப்பெண் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தார்.
உயிரிழந்தவர் கொஸ்கொடப் பிரதேசத்தில் வசிக்கும் 32 வயதுடையவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-4-இ)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜன. 19
இருவருக்கு இடையே ஏற்பட்ட தகராறில், துப்பாக்கியால் சுடப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் பொல்பிதிகம, மதஹபொலயாய, பொத்துவில பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. கொலையின் பின்னர் சந்தேகநபர் துப்பாக்கியுடன் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளார். (ம-4-இ)

### செட்டிகுளம் பகுதியில்

## கையகப்படுத்திய காணிகளை மக்களுக்கு வழங்க நடவடிக்கை

### திலீபன் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, ஜன. 19
செட்டிகுளத்தில் தனி நபர்களால் காடுகள் அழிக்கப்பட்டு கையகப்படுத்தப்பட்ட காணிகளை காணியற்ற மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் தெரிவித்தார்.
வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,
வவுனியா மாவட்டத்தில் சோளச் செய்கையாளர்கள் மிகவும் குறைவு. எனவே சோளச் செய்கையாளர்களை ஊக்குவிக்கவும், புதிதாக உருவாக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
செட்டிகுளம் பிரதேச செயலாளர் கடமையேற்ற காலப்பகுதியில் இருந்து பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. ஆவணங்கள் இன்றி காடுகள் அழிக்கப்பட்டு பல காணிகள் சில நபர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. மக்களுக்கு காணிகள் வழங்குவதற்கு நான் எதிரானவன் அல்லன். ஆனால் தனிநபரின் காடழிப்பு மற்றும் நில அபகரிப்புக்கு இடமளிக்க முடியாது. இந்த விடயம் தொடர்பில் நான் பார்வையிட்டேன். பிரதேச செயலாளரின் 2 ஹெக்ரேயர் கடிதத்தை வைத்துக் கொண்டு இரண்டு நபர்கள் 100 ஏக்கருக்கு மேல் காடுகளை அழித்து காணிகளை அபகரித்துள்ளனர்.
இந்தக் காணிகளைக் கையகப்படுத்தி காணி அற்ற மக்களுக்கு வழங்குமாறு நான் மாவட்டச் செயலாளருக்குத் தெரிவித்திருக்கின்றேன். அவர்கள் அங்கு சென்று பார்வையிட்டுள்ளார்கள். நிச்சயமாக நல்ல முடிவு கிடைக்கும் -என்றார். (ம-18)

## பிரியந்தவின் குடும்பத்துக்கு பாகிஸ்தானால் சம்பளம்

கொழும்பு, ஜன. 19
பாகிஸ்தான் சியால்கோட்டில் ஒரு கும்பலால் அடித்துக் கொலை செய்யப்பட்ட இலங்கைப் பிரஜை பிரியந்த குமாரவின் குடும்பத்துக்கு, 10 வருடங்களுக்கான முதலாவது சம்பளத்தை பாகிஸ்தான் நிறுவனம் வழங்கியுள்ளது.
ஆயிரத்து 667 அமெரிக்க டொலர் இலங்கையிலுள்ள பிரியந்த குமாரவின் மனைவியின் வங்கிக் கணக்குக்கு மாற்றப்பட்டுள்ளது என்று பாகிஸ்தான் பிரதமரின் அரசியல் தொடர்பு சிறப்பு உதவியாளர் ஷாபாஸ் கில் தெரிவித்துள்ளார்.
ஆயிரத்து 667 அமெரிக்க டொலர் என்னும் முதல் சம்பளத்துடன் ஒரு லட்சம் அமெரிக்க டொலர் மதிப்புள்ள நிதியும் பிரியந்த குமாரவின் மனைவியின் கணக்குக்கு மாற்றப்பட்டுள்ளது.
சியால்கோட்டிலுள்ள வணிக சமூகம் ஒரு லட்சம் அமெரிக்க டொலரைத் திரட்டியது என்று அவர் தனது ருவிற்றரில் பதிவிட்டுள்ளார். (ம-4-இ)

## எதனோல் கடத்தல்: விசாரணை ஆரம்பம்

இராஜாங்க அமைச்சர் ஒருவரின் தலையீட்டில் எதனோல் கடத்தியுள்ளமை தொடர்பில், விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று விமானப் போக்குவரத்துத் தலைவர் மேஜர் ஜெனரல் ஜி.எம்.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.
டுபாயில் மறைந்திருந்த வர்த்தகர்ஒருவர் இலங்கைக்கு வந்தபின்னர், இராஜாங்க அமைச்சர் ஒருவரின் தலையீட்டில், பிரபுக்களின் முனையம் ஊடாக இரகசியமாக எதனோல் கடத்தியமை தெரியவந்துள்ளது. விசாரணைகளின் பின்னர் அறிக்கை எதிர்வரும் நாள்களில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-4-இ)

## சிறுமி துஷ்பிரயோகம்: 6 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஜன. 19
11 வயது சிறுமிக்கு, போதைப்பொருள் கொடுத்து அவ்வப்போது பாலியல் துஷ்பிரயோகம் செய்தனர் என்ற குற்றச்சாட்டில் அறுவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி தெஹிவளையில் இடம்பெற்ற விருந்தொன்றில் கலந்து கொள்வதற்காக, வீட்டை விட்டுச் சென்ற சிறுமி மறுநாள் வீடு திரும்பவில்லை என்று சிறுமியின் பெற்றோர் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர்.
சில மணித்தியாலங்களின் பின்னர், வீடு திரும்பிய சிறுமி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அதன்பின்னர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
சிறுமி ஆபத்தான போதைப்பொருள் உட்கொண்டதை சட்ட மருத்துவ அதிகாரி உறுதிப்படுத்தினார். வட்ஸ் அப் மூலம் கிரி சமன் என்ற நபருடன் சிறுமிக்குத் தொடர்பு ஏற்பட்டுள்ளது. அவரே சிறுமியை விருந்தொன்றுக்கும் அழைத்துள்ளார். இதன்போதே சிறுமிக்குப் போதை மாத்திரை கொடுத்து அவர் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.
கைது செய்யப்பட்டவர்கள் ராஜகிரிய, மட்டக்குளி மற்றும் களனி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கடவுளே கதி!

ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர, அவருடைய நண்பருக்கு அனுப்பியதாகக் கருதப்படும் குறுந்தகவல் விவகாரம் தற்போது பூதாகரமாகியுள்ளது. ''கடவுளால் மட்டுமே எமது நாட்டைக் காப்பாற்ற முடியும்'' என்பதுதான் அவர் அனுப்பிய குறுஞ்செய்தி.

சாதாரணமான ஒற்றைச் சொல்லாக இதை எடுத்துவிட்டுக் கடந்துவிட முடியாது. சலிப்பு, வெறுப்பு, அவமானம், நம்பிக்கையீனம், மனச்சோர்வு என்று பல்வேறுபட்ட விடயங்களின் ஒட்டுமொத்தத் திரட்சியாகவும்தான் இந்தச் சொல் அமைகின்றது. ''எமது நாட்டில் அனைத்தும் அத்துமீறிச் சென்றுவிட்டன. இனி எமது கைகளில் ஒன்றுமில்லை. கடவுள் மனம்வைத்தால் மட்டும்தான் இந்தத் தீவுக்கு மீட்சி'' என்பதாக ஜயசுந்தரவின் கூற்றுக்கு (குறுஞ்செய்திக்கு) அர்த்தம் கொள்ளலாம். இவ்வகையான அர்த்தப்பாட்டால்தான் நாளுக்குநாள் இந்தக் குறுஞ்செய்தி தொடர்பான விவாதங்களும், தேடல்களும் தீவிரம் பெறுகின்றது.

சிங்கள மக்களுக்கு வேண்டுமென்றால் இந்தச் சொல் புதியதாக இருக்கலாம். ஆனால், தமிழர்களுக்கு இது பழையது. மிகவும் பழக்கப்பட்டது. சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் எதேச்சதிகாரப் போக்கு இந்தத் தீவில் இன்றுபோல் அன்றும் மிகைப்பட்டிருந்த காலத்தில், தமிழரசுக் கட்சியின் தலைவராக இருந்த தந்தை செல்வா, 'கடவுள்தான் இனித் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும்' என்றுரைத்தார். ஆக, இருவரும் வெளிப்படுத்திய கூற்றுக்கள் ஒருசாரப்பட்டவைதான். ஒருவர் தமிழர்களின் தலைவராகவும் – அவர்களின் பிரதிநிதியாகவும் – இன்னொருவர் அரச இயந்திரத்தின் உச்சப் பதவிநிலையில் இருந்த நபராகவும் தம் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

எனினும், இந்த இரு தரப்பினரின் கருத்துக்களையும் இரு வேறுபட்ட தளத்தில் இருந்து சிந்திக்க வேண்டியவர்களாக நாமிருக்கின்றோம். தந்தை செல்வாவின் கருத்து, தமிழர்களுக்கு மட்டும்தான் இந்தத் தீவில் எதிர்காலம் இல்லை என்பதாக அமைந்தது. ஜயசுந்தரவின் கருத்தோ, ஒட்டுமொத்த நாட்டுக்கும் இன்று எதிர்காலம் என்பதில்லை என்பதைத்தான் கட்டியம் செய்கின்றது. ஜயசுந்தர எதைவைத்து இந்தக் கருத்தை வெளிப்படுத்தினாரோ தெரியவில்லை; இன்று வாழத்தகாத நாடாக இலங்கை மாறிவிட்டது. கடவுள்தான் கதி என்ற நிலைக்கு இலங்கையர்கள் சென்றுவிட்டனர்.

ஆயினும், ஜயசுந்தர இந்தக்கருத்தை வெளிப்படுத்த வேண்டிய தேவை என்ன? என்ற பின்புலம் தற்போது மிகத்தீவிரமாக ஆராயப்படவேண்டியதொன்று. ஜனாதிபதி தனது செயலாளரை நீக்கவும் – மாற்றவும் விரும்பினால் மீண்டும் நியமிக்கவும் அதிகாரமுடையவர்தான். ஆனால், நெருப்பில்லாமல் புகையுமா?. இவ்வாறான இருண்மை சூழ் ஆட்சியால்தான் இன்று இலங்கை வரலாறு காணாத இமாலயப் பின்னடைவுக்குள் தள்ளப்பட்டிருக்கின்றது. இனவாதமும் – மதவாதமும் இந்த நாட்டில் அரசியல் நகர்வுகளைத் தீர்மானிக்கும் வரை – திரைமறைவில் இடம்பெறும் காட்சிகளுக்கும் காய் நகர்த்தல்களுக்கும் வெளிச்சம் பாய்ச்சப்படாத வரை – இந்த நாட்டைக் கடவுளாலும் காப்பாற்ற முடியாது என்பதுதான் உண்மை.

நாளொரு நல்வார்த்தை

மனிதனின் குற்றங்களில் பெரும்பாலானவை அவனது நாவிலிருந்துதான் பிறக்கின்றன. - *நபிகள் நாயகம்.*



# 3 நாள்களுக்குப் போதுமான எரிபொருளே கையிருப்பு!

## அதன் பின்னர் மின்தடைப்படலாம்



**கொழும்பு, ஜன. 19**

**இலங்கையில் மூன்று நாள்களுக்குத் தேவையான எரிபொருள் மாத்திரமே கையிருப்பில் உள்ளது. எதிர்வரும் 22ஆம் திகதி வரை மின்விநியோகம் சீராக இடம்பெறும். அதன்பின்னர் மின் விநியோகம் தடைப்படலாம் என மின்சக்தி அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

டொலர் பற்றாக்குறை காரணமாக, எரிபொருளைத் தரையிறக்குவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. களனி திஸ்ஸ மின்நிலையத்துக்குத் தேவையான மூவாயிரம் மெற்றிக் தொன் உராய்வு எண்ணெய் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வழங்கியதை அடுத்து, மின் விநியோகத்தைத் தடையின்றி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் இருந்து கிடைக்கப்பெறும் மின், வழமைக்குத் திரும்பியுள்ளதால் மின்விநியோகத்தை தற்போதைய நிலையில் துண்டிக்காமலிருக்க அனைத்து முயற்சிகளையும் முன்னெடுத்துள்ளோம். நாட்டில் எரிபொருள் இறக்குமதி மற்றும் எரிபொருள் விநியோகம் ஆகியவற்றின் தனியுரிமை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு உரியதாகக் காணப்படுகின்றது - என்றார். (ம-4-இ)

# எரிபொருள் தடைப்படின் அனைத்தும் முடங்கும்!

## தொழிற்சங்கவாதி எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 19

நாட்டில் எரிபொருள் விநியோகம் தடைப்பட்டால் அனைத்துத் துறைகளும் ஸ்தம்பிதம் அடையும். எனவே எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்கு நிதியை விடுவிக்க, இலங்கை மத்திய வங்கிக்கு அறிவுறுத்த வேண்டும் என்று தொழிற்சங்கவாதியான ஆனந்த பாலித ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

நுரைச்சோலை நிலக்கரி மின்உற்பத்திநிலையத்தின் ஊடாக 300-900 மெகாவோட்ஸ் மின்சாரம் மாத்திரமே, எரிபொருள் வழங்கல் இன்றி உற்பத்தி செய்ய முடியும்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இலங்கை மின்சார சபைக்கு எரிபொருளை வழங்காமல் இருப்பது அமைச்சர் உதய கம்மன்பிலவின் பணிப்புரையால் அல்ல. சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மூடியதன் பின்னர், சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளைப் பெற்றுக் கொள்ள முடியாமையே இதற்குக் காரணம் அது.

தற்போது துறைமுகத்தில் நிறுத்தப் பட்டுள்ள எரிபொருள் கப்பல்கள் தொடர்பில் அமைச்சர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. கப்பல்கள் விடுவிக்கப்படாமல் மின்சார சபை, தொழிற்சாலைகள் மற்றும் பொது மக்களுக்கு எரிபொருள் கிடைக்காது. தற்போதைய நிலைமை தொடர்ந்தால் ரயில் சேவையும் பாதிக்கப்படும். மின்சார சபைக்கு தொடர்ச்சியாக எரிபொருள் விநியோகம் செய்யப்படுவதற்குத் தேவையான நடவடிக்கையை எடுக்கவேண்டும் - என்றார். (ம-4-இ)

நாளை 20.01.2022 வியாழக்கிழமை தை 07
சுபநேரம் : 08.05 - 09.35
ராகுகாலம் : 02.05 - 03.35
புனித செபஸ்தியார் திருவிழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வவுனியாவில்

# தெய்வீக கிராமிய நிகழ்வும் கலை,கலாசார ஊர்வலமும்

**வவுனியா, ஜன. 19**

**இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், வவுனியா பிரதேச செயலகம் நடத்தும் தெய்வீக கிராமிய நிகழ்வும் கலை, கலாசார பாரம்பரிய ஊர்வலமும் சிதம்பரபுரம் பழனி முருகன் வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.**

கலை, கலாசார ஊர்வலத்துடன் ஆரம்பமான நிகழ்வில், ஆசிகுளம் அறநெறிப் பாடசாலைகளைச் சேர்ந்த 150 மாணவர்களும் 15 ஆசிரியர்களும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டதுடன் உதவிகளும் வழங்கப்பட்டன.

வவுனியா பிரதேச செயலர் நா. கமலதாசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதம அதிதிகளாக இந்துமத விவகார இணைப்பாளர் சிவஸ்ரீ இராமசந்திரக் குருக்கள், மாவட்டச் செயலர் பி.ஏ.சரத் சந்திர, மேலதிக மாவட்டச் செயலர் தி.திரேஸ்குமார் ஆகியோரும் சிறப்பு அதிதிகளாக உதவிப் பிரதேச செயலர் பிரியதர்சினி சஜீவன், உதவி மாவட்டச் செயலர் ம.சபர்ஜா, தமிழ் விருட்சத் தலைவர் செ.சந்திரகுமார் கண்ணன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ம-ரி1-110)



ஊரெழு கணேச வித்தியாசாலையில் பொங்கல் விழா நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. பாடசாலை அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-ச)

## பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

திருவையாறு மகா வித்தியாலயத்தின் வருடாந்த பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இதில் தலைவராக இ.விக்கினராஜா, செயலாளராக எஸ்.உதயவர்மன், பொருளாளராக கே.ஜெயாகரன், உபசெயலாளராக திருமதி சந்திரகலா, உபதலைவராக திருமதி குமுதினி, உறுப்பினர்களாக கே.நிலான், ஆர்.ஜசீலன், கே.மலரவன், எஸ்.நிதர்சன், கே.பிரபாகரன் மற்றும் ப.ஜெயந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து வருடந்தோறும் தமது ஒருநாள் வேதனத்தை பாடசாலையின் வளர்ச்சிக்கு வழங்குவது என்று இதன்போது தீர்மானிக்கப்பட்டது. (ச-159)



தைப்பொங்கலையொட்டி காலையடி மறுமலர்ச்சி மன்ற முன்பள்ளியில் இடம்பெற்ற மழலையரின் மகிழ்வுப் பொங்கல் நிகழ்வின்போது...

## கல்விப் பணியைப் பாராட்டி 'மண்ணின் மைந்தன்' விருது

கரைச்சி கோட்டக் கல்வி அதிகாரியும் முன்னாள் அதிபருமான நா.சோதிநாதனின் கல்விப்பணி மற்றும் சமூக சேவைக்காக கிளிநொச்சி மக்கள் அமைப்பினரால் 2020ஆம் ஆண்டுக்கான 'மண்ணின் மைந்தன்' விருது கடந்து ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டது. இந்த நிகழ்வு கிளிநொச்சி மகாதேவா சிறுவர் இல்லத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் 'மண்ணின் மைந்தன்' விருதை மருத்துவ நிபுணர் தவராசா, ஓய்வுநிலை கல்விப்பணிப்பாளரும் மண்ணின் மைந்தனுமான த. குருகுலராஜா, ஓய்வுநிலை பணிப்பாளர் முருகவேள், ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர் விந்தன், கிளி.- பரந்தன் அமைப்பின் தாயக இணைப்பாளர் கி.விக்கினராஜா, மகாதேவா ஆச்சிரம தலைவர் சோமசுந்தரம், ஓய்வுநிலை அதிபர் அ.கனகரட்ணம், ஓய்வுநிலை ஆசிரியர் அருளம்பலம், கிளி. மக்கள் அமைப்பின் கணக்கியலாளர் க.அருள்குமரன் ஆகியோர் இணைந்து இந்த விருதை வழங்கிக் கௌரவித்தனர். (ச-159)



## சித்திவிநாயகர் பாடசாலையில் நேற்றுமுன்தினம் பொங்கல் விழா

வவுனியா, ஜன. 19

வவுனியா, செட்டிகுளம் கணேசபுரம் சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலையில் பொங்கல்விழா நேற்றுமுன்தினம் காலை நடைபெற்றது.

நிகழ்வில், ஆசியுரையை பிரம்மஸ்ரீ லெ.சந்திரசேகரக்குருக்களும் சிறப்புரையை செட்டிகுளம் இந்து கலாசார உத்தியோகத்தர் சிவ.கஜேந்திரகுமாரும் நிகழ்த்தினர். அதனைத்தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் பிரதேசசபை உறுப்பினர் இ.பரிகரன், கணேசபுரம் பத்திரகாளியம்மன் ஆலய தலைவர் ச.சுப்பிர மணியம், கணேசபுரம் சித்தி விநாயகர் அறநெறிப்பாடசாலை மற்றும் கணேசபுரம் திருமூலர் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-18)



ஆசிரியருக்கு கடிதம்

## ஒலிபெருக்கிகளுக்கு ஓய்வு கொடுங்கள்

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்' என்றார் தமிழ்ப் புலவர் ஔவையார். ஆனால், இன்றைய சூழலில் கோயில் உள்ள ஊரில் குடியிருக்க முடியாத நிலையில் சில ஆலயங்களின் நிர்வாகத்தினர் பொறுப்பற்ற விதத்தில் செயற்படுவது வேதனைக்குரியது. தமிழர் தாயகத்தில் பதிவு செய்யப்பட்ட, பதிவு செய்யப்படாத பல கோவில்கள் மூலைக்குமூலை அமைக்கப்பட்டுள்ளன. இதனை வரவேற்கலாம். அதனால் மக்கள் பாதிக்கப்படாது பார்ப்பது அந்தந்த ஆலய நிர்வாகத்தினருடைய பொறுப்பு.

முன்பெல்லாம் திருவிழா போன்ற விசேடங்களுக்கு மட்டும் ஒலிபெருக்கி பாவனைக்கு பயன்படுத்தப்பட்டது. ஆனால் இன்று பெரும்பாலான ஆலயங்களில் நிரந்தரமாக ஒலிபெருக்கிகள் கட்டப்பட்டு நேரகாலம் இன்றி ஒலிக்கப்படுவதால் குறிப்பாக பாடசாலை மாணவர்கள், நோயாளர்கள் அதிலும் உளவியல் சார்ந்த நோயாளர்கள் படும் அவதி சொல்லிமாளாது. ஆலயங்களைக் கட்டுங்கள், நேர்த்திகளை நிறைவேற்றுங்கள், மற்றவர்களுக்காக, உங்களுக்காக பிரார்த்தியுங்கள். அதனால் சகலருக்கும் இறையருள் கிடைக்கட்டும். ஆனால் ஆலயத்தின் செயற்பாட்டால் எவரும் அவதிப்படாது இருக்க வேண்டும்.

எனவே ஆலய நிர்வாகத்தினர் ஒலிபெருக்கி விடயத்தில் கவனம் செலுத்தினால் மிகவும் பயனுள்ள விடயமாகும் என்பதே அடியேனது தாழ்மையான கோரிக்கையாகும்.

**அ.அன்பு**, *வரணி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரிவை ஒன்றாக அறிவித்த தனுஷ் - ஐஸ்வர்யா தம்பதி

சென்னை, ஜன.19

நடிகர் தனுஷ் தனது மனைவியான ரஜினியின் மகள் ஐஸ்வர்யாவை விவகாரத்து செய்வதாக தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

தமிழ்த் திரையுலகில் முன்னணி நடிகராக இருப்பவர் தனுஷ். இவர் தமிழ் திரைப்படங்கள் தவிர ஹிந்தி படங்களிலும் நடித்து உள்ளார். ஹொலிவூட் படத்திலும் நடித்து முடித்து உள்ளார். தற்போது தமிழில் அதிக படங்களைக் கைவசம் வைத்து நடித்து வருகிறார்.

இந்தநிலையில், நடிகர் ரஜினிகாந்தின் மகளும், தனது மனைவியுமான ஐஸ்வர்யாவை விவாகரத்து செய்வதாக நேற்றுமுன்தினம் இரவு திடீர் என்று அறிவித்துள்ளார். இதேபோன்ற அறிக்கையை ஐஸ்வர்யாவும் வெளியிட்டுள்ளார். இவர்கள் இருவரும் கடந்த 2004ஆம் ஆண்டு காதலித்துத் திருமணம் செய்துகொண்டார்கள். இவர்களுக்கு யாத்ரா மற்றும் லிங்கா என்ற இரண்டு மகன்கள் உள்ளனர்.

நடிகர் தனுஷ் திடீர் விவாகரத்து செய்வதாக அறிவித்தமை, ரசிகர்கள் மத்தியிலும், தமிழ்த் திரையுலகிலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ச-இ)

# அபுதாபியில் ட்ரோன் தாக்குதல்; இந்தியர் இருவர் உயிரிழப்பு

ஐக்கிய அரபு அமீரகத் தலைநகர் அபுதாபியில் ட்ரோன் மூலம் நடத்தப்பட்ட தாக்குதலில் இந்தியர்கள் இருவர் உயிரிழந்தனர்.

ஐக்கிய அரபு அமீரகத் தலைநகர் அபுதாபியில் ஏமனில் செயற்படும் ஈரான் ஆதரவு பெற்ற ஹவுத்தி என்ற அமைப்பு ட்ரோன் மூலம் அடுத்தடுத்து தாக்குதல் நடத்தியதில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த மூவரில் இருவர் இந்தியர்கள் எனவும், ஒருவர் பாகிஸ்தானியர் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

அபுதாபி விமான நிலையம் அருகே உள்ள முசாஃபா பகுதியில் செயற்பட்டு வரும் எண்ணெய் நிறுவனம் ஒன்றிலேயே இந்த ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (ச-இ)




# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முதலீடு சம்பந்தமான புதிய முயற்சி களில் இன்று ஈடுபடலாம். தந்தை வழி உறவினர்களால் நன்மைகள் ஏற்படும்.

**இடபம்:** குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு நன்மை நிகழும். பெரியவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். வீண் பயம் தீரும். தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**மிதுனம்:** சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். மகிழ்ச்சியான நாள். துணிச்சலுடன் செயற்படுவீர்கள்.

**கடகம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். சகபணியாளர்களிடம் இணக்கமாக நடந்து கொண்டு நன்மை காண்பீர்கள். வெளியூர், வெளிநாட்டிலுள்ள நண்பர்கள் உங்களுக்கு உதவுவர்.

**சிம்மம்:** குடும்பத்தில் ஒருவருக்கு திருமணம் நிச்சயமாகும். பணவரவு உண்டு. கணவன் மனைவி இடையே ஏற்பட்டிருந்த வருத்தங்கள் அகலும். வாழ்க்கைத்துணையால் நன்மை வரும்.

**கன்னி:** இன்று நிதி பற்றிய முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். சகோதர வகையில் எதிர்பார்த்த விஷயம் தாமதமாகலாம். குடும்பத்தினர் கேட்டதை மகிழ்ச்சியுடன் வாங்கித் தருவீர்கள்.

**துலாம்:** நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். திடீர் பண வரவுக்கு வாய்ப்பு உண்டு. கவலைகள் தீரும். வாழ்க்கைத்துணையின் செயலால் மகிழ்ச்சி உண்டாகும். பணியில் இருந்த சங்கடம் தீரும்.

**விருச்சிகம்:** வியாபாரிகளுக்கு பணப்புழக்கம் முன்பைவிட சற்றே அதிகரிக்கும். உங்களது முனைப்பான முயற்சியால் புதிய விஷயம் ஒன்று சாதகமாக முடியும். எதிர்பார்த்துக் காத்திருந்த செய்தி வரும்.

**தனுசு:** பேச்சிலும் செயலிலும் கவனமாக இருந்தால் பிரச்சினை வராது. கணவன் - மனைவி இடையே புரிதல் அதிகரிக்கும். எதிர்பாராத செலவு வரக்கூடும். வீண் பேச்சைத் தவிர்க்கவும்.

**மகரம்:** உங்களது பேச்சில் நேர்மறை எண்ணம் பிரதிபலிக்கும். கடன் வாங்குவதைத் தவிர்ப்பது நல்லது. பயம் நீங்கும். பணி குறித்த செய்தி ஒன்று உங்களை மகிழ்விக்கும்.

**கும்பம்:** சோம்பலைத் தவிர்ப்பது நல்லது. பழி வராமல் காக்கவும். அதிர்ஷ்டம் வரும். குழந்தைகளின் வாழ்வில் மகிழ்ச்சி உண்டாகும். இலாபம் கூடும். உடல்நலத்தில் கவனம் தேவை.

**மீனம்:** திடீர் சுபச்செலவுகளால் உங்களின் கையிருப்பு குறையக்கூடும். தாயின் தேவைகளை நிறைவேற்றி மகிழ்வீர்கள். வாகனம் வாங்கும் யோகம் உண்டு. புதிய விடயம் கற்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



**கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையா** அவர்களின் மகளும், எமது நடனத்துறை வருகைதரு விரிவுரையாளர் **கலாகீர்த்தி திருமதி சாந்தினி சிவனேசன்** அவர்களின் பாசமிகு சகோதரியும், விரிவுரையாளர் **திருமதி தேவந்தி திருநந்தன்** அவர்களின் அன்புச் சித்தியுமான

## திருமதி நந்தினி ஜெகதீஸ்வரன்

அவர்கள் கடந்த (16.01.2022) அன்று கனடாவில் காலமான செய்தி அறிந்து மிகுந்த மன வேதனை அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

**பிரிவால் துயருறும்**
**நடனத்துறை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

(CR 7134) 1/6

# மரண அறிவித்தல்



## திருமதி தியாகேஸ்வரி கலைஞானசிங்கம் (தியாகம் அன்ரி)

நல்லூர் வடக்கு கோயில் வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தியாகேஸ்வரி கலைஞானசிங்கம் (தியாகம் அன்ரி) நேற்று (18.01.2022) செவ்வாய்க்கிழமை பிற்பகல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கலைஞானசிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா இராசம்மா தம்பதியரின் புதல்வியும், இராசமணி காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் நாகேஸ்வரி மற்றும் காலஞ்சென்ற மகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கனகசிங்கம், தம்பித்துரை மற்றும் நல்லதம்பி, ஜெயதேவி ஆகி யோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் துதி அந்தியகால சேவை, இலக்கம் 69, பிரதான வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2022) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 1 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**நல்லதம்பி நாகேஸ்வரி (நல்லூர்)**
**077 8957 524**

(CS 1150) 1/6

# பணியாளர்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் இலத்திரனியல்சார் இயந்திரவியல் தொழில்நுட்ப சேவையினை வழங்கும் முன்னணி நிறுவனம் ஒன்றிற்கு தொழில்நுட்பவியலாளர்கள் (வயதெல்லை: 18-25) ஆண்கள் தேவை.

இலத்திரனியல், இயந்திரவியல் துறையில் ஆர்வமும், விரைவான செயற்திறனும், நேர்மையும், கடமையுணர்வும், நற்பண்புகளும் இருத்தல் வேண்டும். முன்னனுபவம் தேவையில்லை.

தொடர்புகளுக்கு: **077 361 1041**

(CS 986) 1-6

# கேள்வி கோருதல்



**நயினாதீவு, ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோயில் நூலகம், அரும்பொருட் காட்சியகம் புனரமைப்பும், அழகுப்படுத்தலும்**

மேற்படி வேலைகளுக்கான கேள்விகள் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றது. இவ்வேலைகள் செய்வதற்கான சிற்ப வேலையாட்கள் பொருத்தமான கட்டு வேலை அனுபவம் பெற்றோர் கைவசமுள்ள ஒப்பந்தகாரர் மாத்திரம் கேள்விகள் சமர்ப்பிப்பதுடன் வேலைகள் யாவும் 01.02.2022ம் திகதி ஆரம்பித்து ஆறு மாதத்திற்குள் முடிவுறுத்தப்படல் வேண்டும்.

கேள்வி விண்ணப்பப்படிவங்கள் ஆலய அலுவலகத்தில் 20.01.2022 காலை 10.00மணி முதல் வழங்கப்படும். கேள்வி விண்ணப்பம் முடிவுதிகதி 25.01.2022 மாலை 3.30 மணி வரையாகும். கிடைக்கப்பெறும் கேள்விகள் 26.01.2022 காலை 11.00 மணிக்கு ஆலய அலுவலத்தில் திறக்கப்படும். விரும்பிய கேள்வியாளர்கள் இவ்வேளையில் சமூகமளிக்கலாம். கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூபா ஆயிரம் பணமாகச் செலுத்தி பற்று சீட்டு இலக்கம், திகதி, என்பன கேள்விப் பத்திரத்தில் உரிய இடத்தில் குறிப்பிடப்படல் வேண்டும். தெளிவற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

18.01.2022

ந.மோகனரூபன்
செயலாளர்
அறங்காவலர் சபை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
நயினாதீவு.

# கண்ணீர் அஞ்சலி



எமது சபையின் பணிப்பாளர்
**செ.மகேஸ்வரன்**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி செல்லையா அன்னம்மா**
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்,
இல.12,கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை.

(cr.373751) (2.6)

# நிரந்தர வேலை வாய்ப்பு

பிரபல காப்புறுதி நிறுவனத்தில் நிரந்தரமான வேலைவாய்ப்பு உள்ளமையால் தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம்.



**1. Under Writer**
- A/L சித்தி
- மொழித்தேர்ச்சி சிங்களத்தில்
- கணினி அறிவு
- வயதெல்லை 20 - 30 வரை

**2. எழுதுவினைஞர்**
- A/L சித்தி
- கணினி அறிவு

**3. அலுவலக உதவியாளர்**
- O/L சித்தி

ஆர்வம் உள்ளவர்கள் 24.01.2022 ஆம் திகதிக்கு முன்னர் இரண்டு சிபார்சு நபர்களின் பெயர்கள், தொலைபேசி இலக்கங்கள் உள்ளடங்கலாக உங்களுடைய **CV** ஐ கீழ் தரப்பட்டுள்ள **E-mail** முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**theivendranrajeev07@gmail.com**
**077 603 8773 021 771 0201**
**நேரம் : (8.30 am to 5.30 pm)**

(CS 42339) (3/6)

## மூவர் கைது

முல்லைத்தீவு, ஜன.19

ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மூவர் மாங்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். திருமுறிகண்டியில் நேற்று மாலை சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும், அவர்களிடம் இருந்து 300 மில்லிகிராம் ஹெரோய்ன் மற்றும் 9 கிராம் கஞ்சா என்பன மீட்கப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-19)

## 10 மில். ரூபா நஷ்டம்

கொழும்பு, ஜன. 19

முன்னறிவித்தலின்றி தொழிற்சங்கங்கள் முன்னெடுத்த அடையாள வேலைநிறுத்தத்தால், சுமார் 10 மில்லியன் ரூபா வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் கடந்த சனிக்கிழமை வேலை நிறுத்தப் போராட்டத்தை மீண்டும் தொடங்கியதையடுத்து, சில ரயில் பயணங்கள் நடுவழியில் நிறுத்தப் பட்டன. ரயில் போக்குவரத்து மீண்டும் ஒருமுறை பாதிக்கப்பட்டது. இதுவரை கிடைத்த தகவல்களின்படி, வேலை நிறுத்தப் போராட்டத்தின்போது பயணச்சீட்டு வழங்கப் படவில்லை என்று ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அதே வேளை, வேலை நிறுத்தப் போராட்டத்தின் போது வனப் பகுதிகளில் ரயில்கள் நடுவழியில் நிறுத்தப்பட்டு பயணிகளுக்கு கடும் அசௌகரியங்களை ஏற்படுத்திய சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(ம-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டி ஆயராக மென்டிஸ் நியமனம்

கொழும்பு, ஜன. 19

கண்டி மறைமாவட்டத்துக்கான புதிய ஆயராக வெலன்ஸ் மென்டிஸ் ஆண்டகை நேற்று முன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

கண்டி மறைமாவட்ட ஆயராக பணியாற்றிய ஜோசப் வியானி பெர்னாண்டோ ஓய்வுபெற்றதையடுத்து, அவரது இடத்துக்கு வெலன்ஸ் மென்டிஸ் ஆண்டகை நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கண்டி மறை மாவட்டத்தின் 7ஆவது ஆயரா வார். (ம-4-இ)

## 28 இல. ரூபா வருமானம்

கொழும்பு, ஜன. 19

மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் அதுகல்புர நுழைவாயில் பொதுமக்களின் பாவனைக்காகத் திறக்கப்பட்டுள்ளதை அடுத்து, சுமார் 12 மணித்தியாலங்களில் 28 லட்சத்து 5 ஆயிரத்து 100 ரூபா வருமானம் கிடைத்துள்ளது என்று நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மீரிகம முதல் குருநாகல் வரையிலான அதிவேக நெடுஞ்சாலையில் 12 மணித்தியாலங்களில் 13 ஆயிரத்து 583 வாகனங்கள் பயணித்துள்ளன. விபத்துக்கள் எதுவும் ஏற்படவில்லை.

கடந்த 15ஆம் திகதி ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையில் திறக்கப்பட்ட பாதையூடாக, இந்த வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-4-இ)

## விபத்தில் தாய்,மகன் சாவு!

கொழும்பு, ஜன. 19

மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களை பாரவூர்தி மோதித்தள்ளியதில் தயாயும், மகனும் உயிரிழந்த னர்.

இந்த விபத்து எல்பிட்டி பிடிகல பிரதான வீதியின் அமுகொட பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு நடந்தது.

விபத்தை அடுத்து பாரவூர்தியின் சாரதி தப்பியோடிய நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-4-இ)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 02 . 04 . 1954



மறைவு 20 . 12 . 2021

கடந்த 20.12.2021 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

**அமரர் வைத்திலிங்கம் செல்வரட்ணம்**

அவர்களின் அந்தியேட்டிக் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (19.01.2022) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் **(மதிய போசனம் பழம் வீதி, சித்திவிநாயகர் மண்டபத்தில் நடைபெறும்)** கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**48/3, பழம் வீதி,**
**கந்தர் மடம்.**

**குடும்பத்தினர்**
**070 778 3297**

(cs.42338) (2.6)

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 06 . 1963



மறைவு 13 . 01 . 2022

**பஞ்சலிங்கம் துஷ்யந்தன் (துஷி)**

தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும், Switzerland (Bern)ஐ வதிவிடமாகவும் கொண்ட பஞ்சலிங்கம் துஷ்யந்தன் கடந்த (13.01.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பஞ்சலிங்கம் - சொர்ணபுஷ்பம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பையா - பூமணி தம்பதியரின் அன்பு மருமகனும், சியாமளாவின் (மாலா - Swiss) ஆசைக்கணவரும், காலஞ்சென்ற காண்டீபன் (Swiss) மற்றும் பார்த்தீபன் (Swiss), தமயந்தி (தாவடி), கவிதா (Canada), சந்திரிக்கா (Canada) ஆகியோரின் அன்புச் சகோதரனும், லலிதா (Swiss), ரேணுகா (Swiss).Dr. அற்புதராஜா (தாவடி), சிவராஜா (Canada), ஐங்கரன் (Canada), விஜயரட்ணம் (கொழும்பு), வசந்தாதேவி (கோண்டாவில்), ரஞ்சினிதேவி (Canada), தயாரட்ணம் (கோண்டாவில்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், விகாசினியின் (Swiss) அன்பு சித்தப்பாவும், பார்கவி, ரிஷிகேஷன் (Swiss) ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், முகேஷ்ராம் (தாவடி), துளசிகன், மிதுஷன், லஷ்மன் (Canada) சுவாதி, சரிகா, அவந்திக்கா, யுவந்திக்கா (Canada) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2022) புதன் கிழமை Switzerland -Basel ல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தாவடி வடக்கு,**
**077 643 7888**

தகவல்
**திருமதி தமயந்தி அற்புதராஜா**
**(சகோதரி)**

(CS 42328) (3/6)

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 45 ரூபா

077 334 1281

## தேவை

கிளிநொச்சியில் இயங்கும் பிரபல ஹாட்வெயர் கடைக்கு கணக்காளர் அனுபவமுள்ளவர்கள் தேவை.

070 640 6905, 077 541 3064

(CS 42337) (3/6)

## கண்ணீர் அஞ்சலி



எங்களுடைய பாடசாலையின் ஆசிரியர்
**திருமதி திவ்வியா கிருஷ்ணகுமார்**
அவர்களின் தந்தையார்

**சின்னப்பு சின்னத்தம்பி**

அவர்கள் கடந்த (15.01.2022) திங்கட்கிழமை காலமாகிவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை

(cs.37374) (2.6)

## நினைவழியாப் பெருந்துயரில் 2 ஆம் ஆண்டு நினைவுத்துளிகள்

அன்னை மடியில் 21 . 08 . 1944



ஆண்டவன் அடியில் 11 . 02 . 2020

**அமரர் வேலாயுதர் காசிநாதர்**

(ஓய்வுபெற்ற வயோதிபர் இல்ல ஊழியர்)

திதி: அபரபக்க துதியை

ஆண்டுகள் இரண்டு கடந்தாலும் எம்மை
ஆளாக்கிய தந்தையின் பிரிவு
ஆறாது என்றுமே எம் மனதில்

காலங்கள் போகலாம், காயங்கள் மாறலாம்
நெஞ்சினில் உள்ள உங்கள் நினைவுகள்
என்றும் நம்மை விட்டுப் போகாது
உங்கள் நினைவுகளை காலமெல்லாம்
நாங்கள் சுமந்து நிற்போம்

நீங்கள் இல்லா இல் வாழ்க்கை
நிறைவற்றதாகவே இருக்கிறது
உங்களைப் போல் யார் வருவார்

இனி இன்பத்தில் இன்முகம் காட்டவும்
துன்பத்தில் தோள் கொடுக்கவும்
இவ்வுலகில் நாம் வாழ்ந்திட இறைவனாய்
இருந்து எம்முடன் துணை நிற்க வேண்டுகின்றோம்

எம் பார்வையிலிருந்து மறைந்தாலும்
எமது இதயத்திலிருந்து
ஒரு போதும் மறையப்
போவது இல்லை

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் மறவாத

"செல்வரி பவனம்"
கைதடி கிழக்கு, கைதடி.

(cs.42323) (2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தாவை கும்பிட்டு சர்ச்சையான அதிகாரி

கொழும்பு, ஜன. 19

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை கைகூப்பிக் கும்பிட்டு, சர்ச்சைக்குள்ளாகியுள்ளார் பொறியியலாளர் ஒருவர்.



அதிவேக நெடுஞ்சாலையில் பயண அனுமதிக்கான சீட்டுக் கொடுக்கும் நபர், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை கை கூப்பிக் கும்பிடும் ஒளிப்படம் தொடர்பில் பல சர்ச்சைகள் எழுந்துள்ளன.

இவர் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பொறியியலாளர் ஆவார். இவ்வாறு படித்தவர் குடும்பிடுவது சமூக வலைத்தளங்களில் கடும் விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பில் மூத்த அரசியல் விமர்சகரும், ஊடகவியலாளருமான குசல் பெரேரா சமூக வலைத்தளத்தில் கருத்துப் பகிர்ந்துள்ளார்.

மத்திய அதிவேக நெடுஞ்சாலையைத் திறப்பதற்காக அமைச்சர் நாமல் ராஜபக்சவின் காரில், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச சென்றிருந்தார். அதன் போது பயண அனுமதிக்கான சீட்டு கொடுக்கும் நபர், கைகூப்பிக் கும்பிட்ட செயற்பாடானது ஒட்டு மொத்தக் கல்விமுறையின் இறுதியான திவால் நிலையாகும் என்று குசல் பெரேரா விமர்சித் துள்ளார். (ம-4-இ)




யாழ்ப்பாணம் நல்லூர் வடக்கு
அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் கோவில்
மஹாகும்பாபிஷேகம்
பஞ்சதள இராஜகோபுர கும்பாபிஷேகம்

காலம் : 23.01.2022 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 10.32-11.22 வரையுள்ள சுபவேளை

கர்மாரம்பம் :
19.01.2022 புதன்கிழமை காலை 5.30 மணி

எண்ணெய்க்காப்பு
காலம் : 22.01.2022 சனிக்கிழமை
காலை 6 மணி தொடக்கம் பிற்பகல் 3மணிவரை

தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற திருவருள்பாலித்துள்ளது. கும்பாபிஷேக திருநாளிலும், அதற்கு முன்நடைபெறும் கர்மாரம்ப கிரியைகளிலும் அடிய வர்கள் அனைவரும் உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றி ஆசாரசீலர்களாக கலந்து கொண்டு எம்பெருமானை வழிபட்டு இஷ்ட சித்திகளனைத்தையும் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'

பிரதிஷ்டா பிரதம குரு : சிவாச்சார்யதிலகம்
சிவஸ்ரீ சதா.இராதாகிருஷ்ணக் குருக்கள்
(கல்வியங்காடு)

ஆலய பிரதம குரு:
சிவஸ்ரீ
சதா.யோகீஸ்வரக்குருக்கள்
(கல்வியங்காடு)

ஆலயக் குரு:
சிவஸ்ரீ
முத்து. ஸ்ரீநிவாசககுருக்கள்
(கல்வியங்காடு)

சர்வபோதகம் : வேதாகம ஞானபாஸ்கரன்
சிவஸ்ரீ தாணுமஹாதேவா
சிவாச்சாரியார்
(அதிபர், இணுவில் தர்மசாஸ்தா குருகுலம்)

நிர்மாண ஸ்தபதி :
தமிழ்நாடு கும்பகோணம்
திரு.கி.மணிகண்டன் குழுவினர்

மங்கள வாத்தியம் :
திரு.S.செல்வகுமார் குழுவினர்
(திருநெல்வேலி)

வர்ண வேலைகள் :
திரு.சபேசன் குழுவினர்
கல்வியங்காடு

ஒளி ஒலி அமைப்பு :
குமார் சவுண்ட்
நல்லூர்

சந்திரசேகரப்பிள்ளையார் மேற்குப்புற வாசல்
அலங்கார வளைவு திறப்பு விழா,
ஸ்ரீசந்திரசேகரப்பிள்ளையார் கலாசார மண்டப புகுவிழா
காலம் : 19.01.2022 புதன்கிழமை காலை 6.45 மணி
பஞ்சதளநாயகன் இறுவட்டு வெளியீட்டு விழா
காலம் : 20.01.2022 வியாழக்கிழமை மாலை 6 மணி

'இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க'

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் [illegible]
அறங்காவல்குழு.



12ம் யாழ்ப்பாணம் சர்வதேச
வர்த்தகச் சந்தை

JITF 2022

CONCURRENTLY WITH
Higher Education & Career Exhibition
KALVI JAFFNA 2022

ஜனவரி 2022
21 | 22 | 23
முற்றவெளி மைதானம்
(யாழ் கோட்டைக்கு அருகில்)
10.00மு.ப - 8.00பி.ப

வாருங்கள்!

ORGANIZED UNDER HEALTH GUIDELINES

MAIN SPONSOR: INSEE CEMENT
CO - SPONSOR: SLTMOBITEL
OFFICIAL PARTNERS
ORGANIZED BY: LECS LANKA EXHIBITION
IN ASSOCIATION WITH
ENDORSED SUPPORTED BY
PARTNER COUNTRY

For more information:
Imalka +94 71 7488107 | imalka@saexhibitions.com



சேவை நலன் பாராட்டு




திருமதி மங்கையற்கரசி இராசேஸ்வரன்

பாடசாலை சேவைக்காலம்

01. கிளி / புனித பற்றிமா றோ.க.த. பாடசாலை
16.03.1990 - 31.12.2007
02. கிளி / புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயம்
01.01.2008 - 03.01.2016
03. கிளி / கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயம்
03.01.2016 - 20.01.2022

மங்கையர்க்கு அரசியே
மணிவிழா நாயகியே
நல் மாணாக்கரை மண்ணுக்கு
ஈந்த மாதரசியே...
ஆசிரியப் பணியே அறப்பணி என்று
ஆசையுடன் தொழில் புரிந்த ஆசானே...
மாசறக் கற்பித்து மகிழ்வுகண்ட
மாதவச் செல்வியே
ஓய்விலும் ஓயாது உழைத்திடுங்கள்
எம் மண்ணுக்காய்
வாழ்க! வாழ்க ! வாழ்க பல்லாண்டு

வாழ்த்துவோர் :
பாடசாலைச் சமூகம்
கிளி/ கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயம்.

(cs.1140) (2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
10 . 06 . 1940



இறப்பு
16 . 01 . 2022

## திருமதி யோகேஸ்வரி திருச்செல்வம்

(ஓய்வுபெற்ற இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன
முகாமையாளர்- வவுனியா)

தாமோதரம்பிள்ளை வீதி, சப்பச்சிமாவடி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி திருச்செல்வம் கடந்த (16.01.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திருச்செல்வம் (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ராஜேஸ்வரி, சிவப்பிரகாசம் மற்றும் புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தயாளவதனி, யாழேந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சற்குணசீலன், தக்ஷிகா ஆகியோரின் பாசமி மாமியும், சர்மிலன், அர்ச்சனா, யஷ்மிகா, அனுஷ்காந், ஓவியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தாமோதரம்பிள்ளை வீதி,**
**சப்பச்சிமாவடி,**
**சாவகச்சேரி.**

(cr.37372) (2.6)

**தகவல்:**
**குடும்பத்தினர்**


# மரண அறிவித்தல்


தோற்றம்
07 . 07 . 1930



மறைவு
17 . 01 . 2022

## திருமதி குழந்தை கந்தையா

பருத்தித்துறை வீதி, வரணி இயற்றாலை வரணியை பிறப்பிடமாகவும், குடமியன் வரணியை வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி குழந்தை கந்தையா நேற்றுமுன்தினம் (17.01.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமு- வள்ளியம்மை தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னாச்சி தம்பதியிரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தையா அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னப்பிள்ளை, வேலாயுதபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை மற்றும் இலட்சுமிப்பிள்ளை, காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளை மற்றும் சின்னாச்சிப்பிள்ளை, நடராசா, யோகம்மா (நோர்வே), சிவசுப்பிர மணியம் (லண்டன்), சரஸ்வதிப்பிள்ளை (ஆசிரியை), கமலாதேவி (பிரான்ஸ்), இரஞ்சினிதேவி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தம்பிப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான சின்னப்பு, செல்லத் துரை மற்றும் முருகமூர்த்தி, மதிவதனி, சின்னராசா (நோர்வே),, யோகம்மா (லண்டன்) ராஜயோகானந்-தம், பவளாநந்தன் (பிரான்ஸ்), பாலகுமார் (லண்டன்), ஆகியோரின் அன்பு மாமியாரும், யோகரத்தினம், சிவனேஸ்வரி, லிங்கேஸ்வரன் (பிரான்ஸ்), காயத்திரி - பார்த்தீபன்(பெல்ஜியம்), சிந்துஜா - ராஜ்குமார் (பெல்ஜியம், கிருசாந் (பிரான்ஸ்), பிரசாந், கிருத்திகா, சரண்யா, பார்கவி, வேணுப்பிரியன், பிரகலாதன், பிருந்தா, பிரதீஸ் (லண்டன்), அர்ச்சிதா, அதிசயா, அங்குசன், அக்ஷயா, அக்ஷயன் (பிரான்ஸ்), அஸ்விதா, அருண்வர்சன் (லண்டன்), ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மாதுளன், நிலா, நிலவன், கமல், எழில், இலக்கியா, இலக்கியன், ஆதிரா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக குடமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பருத்தித்துறை வீதி,**
**குடமியன், வரணி.**

**077 171 0893**
(CR 37373) (3.6)

**தகவல்:**
**குடும்பத்தினர்**


# மரண அறிவித்தல்




தோற்றம்
17.11.1947

மறைவு
16.01.2022

## திருமதி குணமாலை யோகாம்பிகை

யாழ். புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட குணமாலை யோகாம்பிகை கடந்த (16.01.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமார், அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லப்பா - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மரு மகளும், காலஞ்சென்ற குணமாலை அவர்களின் பாசமிகு மனைவியும், பகீரதி (கொழும்பு), மோகனதாஸ் (பிரான்ஸ்), பகீரதன் (ஜேர்மனி), பிரேமன் (பிரான்ஸ்), சுரேஷ் (யாழ்ப்பாணம்), சஞ்சீவன் (பெல்ஜியம்), அனுஷா (பிரான்ஸ்) ஆகி யோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற பாஸ்கரன் மற்றும் அனுஷா (பிரான்ஸ்), நளாயினி (ஜேர்மனி), பிரியா (சாவகச்சேரி), சீதாலெட்சுமி (யாழ்ப்பாணம்), சிவகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ் சென்றவர்களான சபாரத்தினம், திருச்செல்வம் (கொலன்ட்) மற்றும் தனலட்சுமி (ஜேர்மனி), தெய்வேந்திரம் (ஜேர்மனி), சண்முகலிங்கம் (லண்டன்), புஷ்பவதி (சாவகச்சேரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, ஏரம்பமூர்த்தி, நாகராஜா, தர்மலிங்கம், மார்க்கண்டு, இராசலிங்கம் மற்றும் அன்னலட்சுமி (பிரான்ஸ்), சுப்பிரமணியம், கௌரி, லீலாவதி, கேதாரகௌரி, ஆகியோரின் அன்பு மைத்துனியும், பேபிஷாலினி - சிவோத்தமன் (லண்டன்), கிந்துசன் - சௌந்திரி (கொழும்பு), அபிநயா, சுருதி, நிலாவிழி (பிரான்ஸ்), ரக்சனா, சஞ்சனா (ஜேர்மனி), கிஷாந், திஷானி, (சாவகச் சேரி), சுஜிதா, அஜித்தா, சுஜேனுகா, திஷாந், கம்சிகா (யாழ்ப்பாணம்), அபினாஷ், டினிதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2022) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் (53/6 அன்னசத்திர வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம்) நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக புங்குடுதீவு (கேரதீவு) இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**53/6 அன்னசத்திர வீதி,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**


**தகவல்: குடும்பத்தினர்**

| | | | |
|---|---|---|---|
| [illegible] | : 0776365820 | பகீரதி | : 077 853 4970 |
| சஞ்சீவன் | : 0032492500450 | மோகனதாஸ் | : 0033667317949 |
| அனுஷா | : 0033605683790 | பகீரதன் | : 00491786365937 |
| | | பிரேமன் | : 0033782206821 |

(CS 42327) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 11 . 09 . 1955

இறப்பு 15 . 01 . 2022

## திரு. சின்னத்தம்பி சற்குணநாதன்

மீசாலை வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சின்னத்தம்பி சற்குணநாதன் கடந்த (15.01.2022) சனிக்கிழமை இறைபாதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வைரமுத்து - இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வநாயகியின் அன்புக் கணவரும், பரமேஸ்வரி, தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரஜிதா (லண்டன்), குருபரன், கோகுலன் (பிரான்ஸ்), சித்திராங்கி ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரேமதாஸ், நிர்மலா, பிரியங்கா, தர்மேந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சபரினா, மிகாஷ், அஸ்வித், ஆத்விக் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2022) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்
மகன் - 077 600 5685

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

(cr7116) (3.6)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும், வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 20 . 01 . 1941

மறைவு 21 . 12 . 2021

## அமரர் தில்லையம்பலம் சிவக்கொழுந்து

எங்கள் தாயாரின் அமரத்துவமடைந்த செய்தி கேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறி எங்கள் துயரில் பங்கெடுத்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தொலைபேசி வாயிலாகவும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் ஊடாகவும் ஆறுதல் தெரிவித்த அனைவருக்கும் இருகரம் கூப்பி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்தோடு நாளை (20.01.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை மனமுவந்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைவரையும் சமுகமளிக்குமாறு வேண்டுகின்றோம்**

வத்திராயன் தெற்கு,
தாளையடி.

குடும்பத்தினர்
077 819 8098

(in.17842) (2.6)

# மரண அறிவித்தல்

## நடராசா சாந்தாதேவி



கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும், அரியாலை, யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவருமான நடராசா சாந்தாதேவி கடந்த (16.01.2022) ஞாயிற்றுக்கிழமை சிவபாதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை சீதாலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா சின்த்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னையா நடராசா அவர்களின் பாசமிகு மனைவியும், சிவமங்களம் (அரியாலை), மதிமங்களம் (அரியாலை), சிவகுமார் (குரு ஹாட்வெயர் - கிளிநொச்சி), ரதிமங்களம் (பிரான்ஸ்), சாந்தினி (லண்டன்), சதீஸ்குமார் (கிளிநொச்சி), அமலகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், முருகானந்தன் (பகலவன் பல்பொருள் வாணிபம் - அரியாலை), வினோதா, சுதர்சன் (பிரான்ஸ்), குமாரதாஸ் (லண்டன்), செல்வி, சோபனா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், அபிநயா, அபிசனன், அர்ச்சனா, அஸ்வின், அபினன், அஸ்விகா ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், வேணுஜன், அர்ச்சனன், ஹம்சிதன், அக்சனா, ஹைஸ்வர்யா, ஆதிரா ஆகியோரின் அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (20.01.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் (இல.138, நெடுக்குளம் வீதி, அரியாலை யாழ்ப்பாணம்) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
077 869 1045
+44 74470 11539
077 696 6169

138, நெடுக்குளம் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(CS 1144) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்களுக்கான...

9 ஆவது நாடாளுமன்றத்தின் 2ஆவது கூட்டத்தொடரை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நேற்று சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்தார். சம்பிரதாய வரவேற்புகளின் பின்னர் ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை நடைபெற்றது.

இந்தக் கொள்கை விளக்கவுரையில் ஜனாதிபதி தெரிவித்ததாவது:

**மனித உரிமைகள் மீறப்படவில்லை!**

எனது ஆட்சியின்கீழ் மனித உரிமைகள் மீறப்படவில்லை. இனி மீறப்படவும் மாட்டாது. மனித உரிமைகளை மீறும் விவாதத்திலான சம்பவங்களை ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம்.

நாம் சர்வதேசச் சட்டங்கள் மற்றும் சமவாயங்களை மதிக்கின்றோம். எனினும், எமது நாட்டின் மனித உரிமை நிலைவரம் தொடர்பில் சர்வதேசத்துக்கு கடந்த காலங்களில் தவறான கருத்துக்கள் கொண்டு செல்லப்பட்டன. அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டிய தேவை எமக்கு இருக்கின்றது .

**அரசியலைக் கைவிடுங்கள்**

நீண்டகாலமாகத் தடுப்பில் இருந்த புலிகள் அமைப்பின் செயற்பாட்டாளர்கள் சிலருக்கு மன்னிப்பு வழங்கி, அவர்களை விடுவிப்பதற்கு நான் நடவடிக்கை எடுத்தேன். பயங்கரவாத தடைச்சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கு நாம் தயார்.

தேசிய பாதுகாப்பு, இறையாண்மைக்கு முன்னுரிமை வழங்கப்படும் அதேவேளை சர்வதேச சமூகத்தால் முன்வைக்கப்படும் பரிந்துரைகளுக்கு சாதகமான பிரதிபலிப்பையும் வெளிப்படுத்துவதற்கு தயாராகவே இருக்கின்றோம். போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்கு- கிழக்கு மக்களுக்கு எல்லாவற்றை விடவும் பொருளாதாரப் பாதுகாப்பே முக்கியமாக இருந்தது.

அரசியல் கொள்கை நிலைப்பாடுகளை தற்காலிகமாகவேனும் ஒதுக்கி வைத்து விட்டு, உங்கள் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு அரசால் முன்னெடுக்கப்படும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று வடக்கு, கிழக்கு மக்களைப் பிரதிநித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன் .

**காணி விடுவிப்பு**

போர்க் காலத்தில் இராணுவ நடவடிக்கைக்காக வடக்கு, கிழக்கு பகுதிகளில் கையகப்படுத்தப்பட்ட காணிகளில் நூற்றுக்கு 90 வீதமானவை, நான் பாதுகாப்புச் செயலாளராக இருக்கும்போது விடுவிக்கப்பட்டன. அந்தப் பகுதிகளில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு தற்போது அமைதியான சூழல் நிலவுவதால் எதிர்காலத்தில் எஞ்சிய காணிகளையும் விடுவிக்க முடியும்.

போர்க் காலத்தில் காணாமல்போனோர் தொடர்பான பிரச்சினை ஒரு தரப்புக்கு மட்டும் உரியது அல்ல. இவர்கள் அனைவருக்கும் நீதியை வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம். நாம் இனவாதத்தை நிராகரிக்கின்றோம். அனைத்து மக்களினதும் கௌரவத்தையும், உரிமைகளையும் ஒரே விதத்தில் பாதுகாப்பதே எமது நோக்கம். எனவே, குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக மக்களை பிளவுபடுத்தும் செயலை இனியாவது நிறுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்- என்றார்.

**பிரச்சினையை மறந்த கோத்தா**

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாகவோ, புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பாகவோ, தீர்வு தொடர்பான பேச்சு தொடர்பாகவோ ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தனது உரையில் எதுவும் குறிப்பிடவில்லை. இது தமிழ்த் தரப்புகளிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கின்றது. (எ-44)

## கோத்தாவின்...

பிரதாயபூர்வமாக ஆரம்பித்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, தனது கொள்கை விளக்கவுரையையும் நிகழ்த்தினார். கொள்கை விளக்கவுரை முடிவடைந்த பின்னர் நாடாளுமன்றம் இன்று பிற்பகல் ஒரு மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

நாடாளுமன்றம் இன்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடும். ஆரம்பகட்ட சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர், சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதம் ஆரம்பமாகும்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரையை மையப்படுத்தியே குறித்த ஒத்திவைப்புவேளை பிரேரணை எதிரணியால் முன்வைக்கப்படவுள்ளது. நாளையும் விவாதம் இடம்பெறும். (எ-44)

## தீர்வை...

யத் தூதுவரிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சோ.சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.வி.விக்னேஸ்வரன், செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன்மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் , ரெலோவின் பேச்சாளர் கு.சுரேன் ஆகியோர் இணைந்து இந்த ஆவணத்தை இந்தியத் தூதுவரிடம் கையளித்தனர். இந்தச் சந்திப்பில் சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பாகவும் பேசப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கை அரசு '13'ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான அழுத்தத்தை வழங்க வேண்டும் என்றும், இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கோரிக்கை விடுக்கும் ஆவணத்தை தமிழ்க் கட்சிகள் இணைந்து தயாரித்திருந்தன என்பது குறிப்பி டத்தக்கது. (எ-22)

## எரிபொருள்...

தும் மின் துண்டிப்பு ஏற்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

மின் விநியோகத்தைத் துண்டிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் ஒரு நாளை ஒன்று அல்லது ஒன்றரை மணித்தியால மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்று மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

200 மெகாவாட்ஸ் மின் உற்பத்தி செய்யும் சபுகஸ்கந்த மற்றும் களனி திஸ்ஸ மற்றும் கொழும்பு துறைமுகத்தை அண்மித்த பகுதியில் உள்ள மிதக்கும் மின் நிலையத்துக்கு டீசல் மற்றும் உராய்வு எண்ணெய் விநியோகிப்பதில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த மின்நிலையங்களுக்கு ஒரு நாளைக்கு ஆயிரத்து 500 மெற்றிக் தொன் எரிபொருள் தேவை. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வழங்கிய 3 ஆயிரம் மெற்றிக்தொன் உராய்வு எண்ணெய் நேற்று மாலையுடன் முடிவடைந்துள்ளது என்று மின்சக்தி அமைச்சர் தெரிவித்தார்.

இந்தியாவின் ஐ.ஓ.சி. நிறுவனத்திடம் தற்காலிகமாக எரிபொருளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை [illegible] எனினும் அந்த [illegible] முடிந்துள்ளது.

'கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ள எரிபொருள் கப்பலுக்குத் தேவையான டொலரை விடுவிக்க வேண்டும் என்று இலங்கை மத்திய வங்கியிடமும், நிதியமைச்சிடமும் கோரிக்கை விடுத்துள்ளோம்' என்று மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

'எரிபொருள் இன்மையால் களனி திஸ்ஸ மின் உற்பத்தி நிலையத்தினதும், சபுகஸ்கந்த மின் உற்பத்தி நிலையத்தினதும் செயற்பாடுகள் நேற்றுத் தடைப்பட்டன. கைவசமுள்ள டீசலை பயன்படுத்தி இன்று (நேற்று) மின்வெட்டை நடைமுறைப்படுத்தாதிருக்க முயற்சிக்கின்றோம்' என்று இலங்கை மின்சார சபையின் ஊடகப்பேச்சாளர் அன்ரூ நவமணி நேற்றுத் தெரிவித்திருந்தார்.

அதேவேளை, நேற்றுமாலை இலங்கை மின்சார சபைக்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 900 மெற்றிக்தொன் எரிபொருளை அவசர தேவையின் அடிப்படையில் வழங்கியமையால் மின்வெட்டுத் தவிர்க்கப்பட்டது என்று கூறப்படுகின்றது. (எ-இ)

## கோத்தாபய...

வெளியிட்டு வரும் கருத்துக்கள் அதைப் பறைசாற்றுகின்றன.

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஜனாதிபதி ஒரு வழியிலும், பிரதமர் இன்னொரு வழியிலும், அமைச்சர்கள் வேறொரு வழியிலும் பயணித்தால் தத்தளித்துக்கொண்டிருக்கும் அரசை எப்படி நிமிர்த்துவது?

அரசை வீட்டுக்கு அனுப்புவது எமது நோக்கம் அல்ல. எனினும், இக்கட்டான இந்த நிலையில் தீர்க்கமான முடிவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எடுக்க வேண்டியுள்ளது.

வாக்குறுதிகளை நிறைவேற்றியே தீருவோம் என்று ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்கள் நிறைவடைந்த பின்னரும் அரசின் தலைமை கூறுவது ஆணை வழங்கிய மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்றும் செயலாகும் - என்றார். (எ-22)

## கடைசியில்...

ஜயந்த நாடாளுமன்றத்தில் பின்வரிசை ஆசனத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.

நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில் அவர் 71ஆவது ஆசனத்தில் அமர்ந்திருந்தார். இராஜாங்க அமைச்சுப் பதவி வகித்தபோது அவருக்கு 31ஆவது ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தது.

சுசில் பிரேமஜயந்த தற்போது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை மட்டும் வகிப்பதால் அவருக்கு பின்வரிசை ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவித்தன.

அதேவேளை, பதவி நீக்கப்பட்டுள்ள சுசில் பிரேமஜயந்த, புதிய அரசியல் கூட்டணி ஒன்றை உருவாக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் முயற்சிகளுக்கு ஆதரவளித்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-இ)

## மூங்கிலாறு...

தரி, சகோதரியின் கணவன் மற்றும் மைத்துனன் ஆகியோரின் விளக்கமறியல் எதிர்வரும் முதலாம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றின் நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, விளக்கமறியலை நீடித்தது நீதிமன்று.

கடந்த 13ஆம் திகதி காணாமற் போயிருந்த சிறுமி, கடந்த 18 ஆம் திகதி வீட்டிலிருந்து சுமார் 400 மீற்றர் தொலைவில் உள்ள பற்றைக் காணியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார். அவரது உயிரிழப்புக்கு பிறப்புறுப்பில் ஏற்பட்ட காயமே காரணம் என்பதும், சிறுமி கர்ப்பமாக இருந்தார் என்பதும் உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்திருந்தது.

சிறுமிக்கு சட்டவிரோதமாக கருக் கலைப்பு செய்ய முயற்சிக்கப்பட்டபோது, சிறுமி உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டுவரும் புதுக்குடியிருப்புப் பொலிஸார் சிறுமியின் தாய், தந்தை, சகோதரி, சகோதரியின் கணவன் மற்றும் மைத்துனன் ஆகியோரைக் கைது செய்துள்ளனர். அவர்கள் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (எ-19)

## கடன்...

னவு செய்வதற்காக 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை மீண்டும் இந்தியா வழங்கியுள்ளது.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெயசங்கர், இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கு இது தொடர்பில் கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளார்.

இந்தியா அண்மையில் இலங்கைக்கு 900 மில்லியன் அமெரிக்க டொலருக்கு மேல் வழங்கியிருந்தது. இலங்கை டொலர் பற்றாக்குறையால் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்து வரும்நிலையில் இப்போது மீண்டும் இந்தியாவின் கடனுதவி கிடைத்துள்ளது. (எ-இ)

## வெறும்...

கத் தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நேற்று நாடாளுமன்றில் ஆற்றிய கொள்கை விளக்கவுரையில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக காத்திரமான விடயங்கள் எவையும் குறிப்பி டப்படவில்லை. இது தமிழ்த் தரப்புகளிடையே கடும் அதிருப்தியையும், விசனத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

ஜனாதிபதி உரை நிகழ்த்தியபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும் நாடாளுமன்றில் இருந்தார். ஜனாதிபதியின் உரையால் அவர் கடும் அதிருப்தியடைந்திருந்தார் என்று தெரிகின்றது. உரை முடிந்த பின்னர், ஜனாதிபதியின் தேநீர் விருந்துபசாரத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புறக்கணித்தி ருந்தது. நாடாளுமன்றத்தில் இருந்து வெளியே வந்துகொண்டிருந்த இரா.சம்பந்தன், எதிரே வந்த நிதியமைச்சர் பஸில் ராஜபக்சவிடம் தனது அதிருப்தியைத் தெரிவித்துள்ளார்.

"ஜனாதிபதியின் இந்தப் பேச்சு வெறும் குப்பை. உருப்படியாக இதில் எதுவும் இல்லை. இதைப்போய் அவரிடம் சொல்லுங்கள். நான் தேநீர் உபசாரத்துக்கு வரவில்லை. வந்தால் இதை நானே அவருக்கு நேரடியாகக் கூற வேண்டியிருக்கும். அப்படி வேண்டாம் என்பதற்காகத்தான் தேநீர் உபசாரத்தையே தவிர்த்துக் கொண்டிருக்கின்றேன்" என்று பஸில் ராஜபக்சவிடம், இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

'எங்களுடைய நாட்டின் தேசிய பிரச்சினை குறித்து ஏதும் இந்தப் பேச்சில் சொல்லப்படவில்லை. இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் உங்களுக்கு எதுவும் சரிப்பட்டு வராது. உருப்படவே மாட்டீர்கள் என்பதை அவரிடம் போய்ச் சொல்லுங்கள் 'என்று கோபமாகக் கூறிய இரா.சம்பந்தன் அங்கிருந்து அகன்றுள்ளார். (எ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியின் பெரும்போர் சமநிலையில் முடிந்தது!



கிளிநொச்சி, ஜன. 19

**வன்னியின் பெரும்போர் என்று வர்ணிக்கப்படும் கிளிநொச்சி மகா வித்தியாலய அணிக்கும், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணிக்கும் இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.**

கிளிநொச்சி மகா வித்தியலய மைதானத்தில் கடந்த ஞாயிறு, திங்கள் என்று இரு தினங்கள் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணி வெற்ற பெற்று முதலில் களத்தடுப்பை தீர்மானிக்க புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி துடுப்பெடுத்தாடியது. 78.2 பந்துப்பரிமாற்றங்களில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி 188 ஓட்டங்களைப் பெற்று அனைத்து இலக்குகளையும் இழந்தது.

அதிகபட்சமாக புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியைச் சேர்ந்த ம.தேனுஜன் 70 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணிசார்பாக அபிசாந், பிரவிந்தன் ஆகியோர் தலா மூன்று இலக்குகளைக் கைப்பற்றினர். பதிலுக்குத் துடுப்பெ டுத்தாடிய கிளிநொச்சி மகா வித்தியாலய அணி 250 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இன்னிங்ஸை முடித்துக் கொண் டது. அதிகபட்சமாக கதிர்ச்செல்வன் 56 ஓட்டங்களைப் பெற்றார்.

இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியினர் 7 பந்துப் பரிமாற்றங்களில் 29 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கை இழந்திருந்தபோது ஆட்டம் சமநிலையுடன் முடிவடைந்தது.

சிறந்த சகலதுறை வீரனாக கிளிநொச்சி மகா வித்தியாலய அணியின் தலைவர் ஜோ.பிரவிந்தன், சிறந்த துடுப்பாட்ட வீரராக கிளிநொச்சி மகாவித்தியாலய அணியின் கதிர்ச்செல்வன், போட்டியின் ஆட்டநாயகனாக புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தின் எம்.தேனுஜன், சிறந்த பந்து வீச்சாளராக புதுக்குடி யிருப்பு மத்திய கல்லூரியின் விதுசன், சிறந்த களத்தடுப்பாளராக புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பற்றிக் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். கிண்ணத்தை வடக்கு மாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர் ரி.ஜோன் குயின்றஸ் வழங்கினார்.

(ம-6)

# சவால்களை எதிர்கொள்ள ஐக்கிய மக்கள் சக்தி தயார்

## அத்தநாயக்க தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 19

**எந்தவொரு சவாலையும் எதிர்கொண்டு, நாட்டை ஆளுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயார் என்று நாடாளுமன்ற உறுப்பினரான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

பொருளாதாரத்தை உயர்த்துவதற்கும், நாட்டின் வருமானத்தை அதிகரிப்பதற்கும் எமது அணி கடுமையான வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

வெளிநாட்டுக் கையிருப்பு நெருக்கடி உட்பட நாடு தற்போது பல சவால்களையும் எதிர்கொள்கின்றது. பிரச்சினையைத் தீர்ப்பதற் கான திட்டம் அரசிடம் இல்லை. எனினும் சவாலை வெற்றி கொள்வதற் கான வேலைத் திட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தி வகுத்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்பட்டால், அதன் விளைவுகளை அரசு அறிந்திருப்பதால், தேர்தலை எதிர்கொள்ளப் பயந்தே தேர்தலை ஒத்தி வைத்துள்ளது. அதேவேளை ஈஸ்டர் ஞாயிறுத்தாக்குதலை அடுத்து தற்போதைய நிர்வாகத்தின் தலைவர்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியுள்ளனர்.

விசாரணைகளின் மூலம் தெரியவந்த தகவல்கள் தொடர்பில், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. குண்டு வெடிப்புச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும். தாக்குதலைத் தடுக்கத் தவறியவர்கள்மீதும், தாக்குதல் நடத்தியவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நீதியை நிலைநாட்ட வேண்டும் என்றார்.

(ம-4-இ)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து நுணாவில் செல்லும் A-9 பிரதான வீதியில் நல்ல தண்ணீர் பொதுக் கிணற்றடி அருகாமையில் நிலப்பரப்பு 6 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன் கைதடி பிள்ளையார் கோயிலில் இருந்து 500 M தூரம். பார்வையிடும் நேரம் : காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை.

தரகர் தேவையில்லை. விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு: 077 814 7389, 077 614 7333

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழி A-32 மெயின் றோட்டில் 1ஆம் வீதியில் 15 பரப்புக்காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

நாவற்குழி சந்தியிலிருந்து 300 m தூரம் வீடு அமைப்பதற்கு நல்ல சூழல்.

1 நிலப்பரப்பின் விலை 5 லட்சம்.

076 890 9259, 077 015 0353

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 31 . 07 . 1963

ஆண்டவன் அடியில் 17 . 01 . 2022



### திருமதி அருட்செல்வி நந்தகுமார்

வீமன்காமம் வடக்கை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருட்செல்வி நந்தகுமார் 17.01.2022 (திங்கட்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் நந்தகுமார் (கனடா) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான குமாரசிங்கம் தங்கம்மா ஆகியோரின் அருமை மகளும், சகீன், ஜர்ஷினி (கனடா) ஆகி யோரின் பாசமிகு தாயாரும், குமாரசிங்கம் அருந்தவநாதன் (ஓய்வுபெற்ற கூட்டுறவு உதவி ஆணையாளர் யாழ்ப்பாணம்) குமாரசிங்கம் இரவீந்திரநாதன் (ஓய்வுபெற்ற கூட்டுறவு உதவி ஆணையாளர் வவுனியா) ஆகியோரின் அன்பு சகோத ரியும், அருந்தவநாதன் கஜவதனி, இரவீந்திரநாதன் வாசுகி (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20.01.2022 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்

கு.அருந்தவநாதன்
கு.இரவீந்திரநாதன்
(சகோதரர்)

077 416 1056
077 614 3342

(CS 42336) (3/6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.